# செயல்முறை திட்டம்

# 2024–2025

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

©
தமிழ்நாடு அரசு
2024

## பொருளடக்கம்


| வரிசை எண் | விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இடஒதுக்கீடு | 3 |
| 3. | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்கங்களுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு | 3 |
| 4. | கல்வி உதவித் தொகை திட்டங்கள் | 4 |
| 5. | கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் | 10 |
| 6. | சீருடைகள் வழங்குதல் | 14 |
| 7. | விடுதிகள் | 15 |
| 8. | உணவு மானியம் வழங்குதல் | 19 |
| 9. | இலவச மிதிவண்டிகள் வழங்குதல் | 20 |
| 10. | சீர்மரபினர் நல வாரியம் | 21 |
| 11. | நரிக்குறவர் நல வாரியம் | 22 |
| 12. | சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது | 23 |
| 13. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த கிராமப்புற மாணவியருக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்குதல் | 24 |
| 14. | மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் வழங்குதல் | 24 |
| 15. | பித்தளை தேய்ப்புப் பெட்டி வழங்குதல் | 25 |
| 16. | இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல் | 26 |
| 17. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 27 |
| 18. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 29 |
| 19. | தமிழ்நாடு வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம் | 33 |
| 20. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கு தனி இடஒதுக்கீடு | 35 |
| 21. | சிறுபான்மையினர் கல்வி உதவித் தொகை | 35 |

| | | |
|---|---|---|
| 22. | சிறுபான்மையினர் விடுதிகள் | 38 |
| 23. | முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் | 41 |
| 24. | கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் | 42 |
| 25. | உலமாக்கள் மற்றும் இதரப் பணியாளர்கள் நல வாரியம் | 43 |
| 26. | கிராமப்புற சிறுபான்மை மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல் | 45 |
| 27. | சிறுபான்மையினருக்கு தையல் இயந்திரங்கள் வழங்குதல் | 45 |
| 28. | கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் | 45 |
| 29. | ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கான நிதியுதவி | 46 |
| 30. | கிறித்துவ தேவாலயங்கள் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம் | 46 |
| 31. | கபர்ஸ்தான் மற்றும் கல்லறைத் தோட்டம் அமைத்தல் | 48 |
| 32. | சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கான சிறுபான்மையினர் அந்தஸ்து | 49 |
| 33. | பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் | 49 |
| 34. | பிரதம மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் (PMJVK) | 57 |
| 35. | தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 72 |
| 36. | தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ) | 76 |
| 37. | தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 77 |
| 38. | தமிழ்நாடு வஃக்ப் வாரியம் | 79 |
| 39. | தமிழ்நாடு மாநில ஹஜ் குழு | 83 |

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயல்முறைத் திட்டம் 2024-2025

### 1. முன்னுரை

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர், மற்றும் சிறுபான்மையினர் நலனுக்காக பாடுபடுவதிலும், அவர்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு அரசு முன்னோடியாக உள்ளது.

அரசு அளவில், அரசு செயலாளர், அவர்கள் தலைமையில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை உள்ளது. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் ஆகியோர் முறையே பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினருக்கான பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றனர்.

மாவட்ட ஆட்சியர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினருக்கு மாவட்ட அளவில் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றனர்.

இணை இயக்குநர், கள்ளர் சீரமைப்பு அவர்கள் மதுரையை தலைமையிடமாகக் கொண்டு மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள கள்ளர் சீரமைப்பு பள்ளிகளின் செயல்பாட்டை கவனித்து வருகிறார்.

மாநில சிறுபான்மையினர் ஆணையம் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும், இது சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள அரசியலமைப்பு மற்றும் சட்ட உரிமைகளை உறுதிசெய்து, மாநிலத்தில் சிறுபான்மையினரின் மேம்பாட்டிற்காக செயல்படுகிறது. தமிழ்நாடு

பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 340வது பிரிவின் கூறு 16(4)-இன் கீழ் நிலையான அமைப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பை சார்ந்தவர்களுக்கு பொருளாதார ரீதியாக மேம்படுத்தவும், அவர்களின் தொழில் முனைவோர் நோக்கங்களை ஆதரிக்க தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் சிறுபான்மையினருக்கு பல்வேறு வகையான சிறப்பு கடன்கள் வழங்குகிறது.

தமிழ்நாடு வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் வாரியம் தமிழ்நாடு வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டம், 2018 இன் கீழ் வன்னியகுல சத்திரிய சமுதாயத்தை சேர்ந்தவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகவும் வன்னிய பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகளின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும் உருவாக்கப்பட்டது.

இத்துறையின் கீழ் சீர்மரபினர் நல வாரியம், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் மற்றும் கிறித்துவ உபதேசியர்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் போன்ற நல வாரியங்கள் செயல்பட்டு வருகின்றன.

இம்மாநிலத்தில் 43 முஸ்லீம் மகளிர் உதவிச் சங்கங்களும், 41 கிறிஸ்தவ மகளிர் உதவிச் சங்கங்களும் நிறுவப்பட்டுள்ளன. இந்த சங்கங்கள் மூலம் சிறுபான்மை பெண்களுக்கு திறன் சார்ந்த பயிற்சி மற்றும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

வக்ஃப் நிறுவனங்களின் நிர்வாகத்தை திறம்பட நிர்வகிப்பதற்காக தமிழ்நாடு வக்ஃப் வாரியம் உருவாக்கப்பட்டது. சவூதி அரேபியாவில் மக்கா/மதீனாவுக்குச் செல்லும் ஹஜ் புனித பயணம் மற்றும் தங்குமிடத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய தமிழ்நாடு மாநில ஹஜ் குழு செயல்படுகிறது.

2. **இடஒதுக்கீடு**

அரசு பணிகளில் நியமனங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் மாணவ, மாணவியர் சேர்க்கையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் இவர்கள் கல்வி மற்றும் மாநில அரசுத் துறைகளில் வேலைவாய்ப்பு பெற்று சமூக மற்றும் பொருளாதார ரீதியில் மேம்பாடு அடைய வழிவகை செய்கிறது. தற்போது வழங்கப்படும் இடஒதுக்கீட்டின் அளவு விவரம் பின்வருமாறு :-

| | |
|---|---|
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 26.5 விழுக்காடு |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் | 3.5 விழுக்காடு |
| மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் | 20 விழுக்காடு |
| ஆதிதிராவிடர் | 18 விழுக்காடு |
| பழங்குடியினர் | 1 விழுக்காடு |
| **மொத்தம்** | **69 விழுக்காடு** |

**3. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | நிதி ஒதுக்கீடு | | |
|---|---|---|---|---|
| | | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| 1 | 2019-2020 | 41716.16 | 45716.24 | 87432.40 |
| 2. | 2020-2021 | 45173.67 | 53680.62 | 98854.29 |
| 3. | 2021-2022 | 53010.75 | 56533.04 | 109543.79 |
| 4. | 2022-2023 | 54620.49 | 60852.73 | 115473.22 |
| 5. | 2023-2024 | 58361.93 | 60124.32 | 118486.25 |

## 4. கல்வி உதவித் தொகை திட்டங்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியரின் கல்வி முன்னேற்றத்திற்காக பின்வரும் திட்டங்களின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

அ. பள்ளிப் படிப்பு உதவித் தொகை

ஆ. பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை

இ. மூன்றாண்டு கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்புகளுக்கு இலவசக் கல்வி உதவித் தொகை திட்டம்

ஈ. பல்தொழில்நுட்ப பயிலகங்களில் (பாலிடெக்னிக்குகளில்) பயிலும் மூன்று வருட பட்டயப்படிப்புகளுக்கு இலவசக் கல்வி உதவித்தொகை திட்டம்

உ. தொழிற்கல்வி படிப்புகளுக்கு இலவசக்கல்வி உதவித்தொகை திட்டம்

ஊ. ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் இளநிலை/ முதுநிலை பயிலும் தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவ/மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்

எ. அரசு பள்ளிகளில் பயின்று 7.5% இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவ படிப்புகளில் சேரும் மாணவ/மாணவியருக்கு கல்வி கட்டணம் ஈடு செய்தல்

**(i). கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டங்களின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம்.**

### அ. பள்ளிப் படிப்பு உதவித் தொகை

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் | |
|---|---|---|---|
| | | செயல் | நிதி |
| 1 | 2019-20 | 117822 | 180.05 |
| 2 | 2020-21 | 116296 | 133.68 |
| 3 | 2021-22 | 98190 | 112.92 |
| 4 | 2022-23 | 107405 | 123.52 |
| 5 | 2023-24 | 136966 | 157.52 |

**ஆ. பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் | |
|---|---|---|---|
| | | செயல் | நிதி |
| 1 | 2019-20 | 305073 | 8202.80 |
| 2 | 2020-21 | 314293 | 6929.06 |
| 3 | 2021-22 | 301497 | 7979.84 |
| 4 | 2022-23 | 337854 | 9993.98 |
| 5 | 2023-24* | 256036 | 4909.26 |

**இ. இலவச கல்வி (மூன்றாண்டு கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்புகள்)**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் | |
|---|---|---|---|
| | | செயல் | நிதி |
| 1 | 2019-20 | 183442 | 3484.19 |
| 2 | 2020-21 | 194268 | 3730.66 |
| 3 | 2021-22 | 196688 | 4095.36 |
| 4 | 2022-23 | 209550 | 4795.32 |
| 5 | 2023-24* | 95656 | 2226.24 |

**ஈ. இலவச கல்வி (மூன்றாண்டு பட்டயப் படிப்புகள்)**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் | |
|---|---|---|---|
| | | செயல் | நிதி |
| 1 | 2019-20 | 3664 | 152.88 |
| 2 | 2020-21 | 2848 | 113.91 |
| 3 | 2021-22 | 2528 | 104.05 |
| 4 | 2022-23 | 2304 | 95.61 |
| 5 | 2023-24* | 760 | 33.90 |

**உ) இலவசக்கல்வி ( தொழிற் கல்வி படிப்புகள்)**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் | |
|---|---|---|---|
| | | செயல் | நிதி |
| 1 | 2019-20 | 130731 | 6987.08 |
| 2 | 2020-21 | 116148 | 5362.70 |
| 3 | 2021-22 | 114957 | 5946.61 |
| 4 | 2022-23 | 120667 | 6591.79 |
| 5 | 2023-24* | 60665 | 3600.94 |

*செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**ஊ) பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவ/ மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்**

தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் உள்ள பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியருக்கு நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2.50 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் 714 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.463.40 இலட்சம் செலவிடப்பட்டது.

**எ) அரசு பள்ளிகளில் பயின்று 7.5% இட ஒதுக்கீட்டின் கீழ் மருத்துவ படிப்புகளில் சேரும் மாணவ/ மாணவியருக்கு கல்வி கட்டணம் ஈடு செய்தல்**

அரசு பள்ளிகளில் பயின்று 7.5% இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்புகளில் சேரும் மாணவ/மாணவியருக்கு கல்வி கட்டணம் மருத்துவ கல்வி இயக்ககத்திற்கு ஈடு செய்யப்படுகிறது. 2023-24 ஆம் கல்வி ஆண்டில் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்பில் பயிலும் 1185 மாணவ, மாணவியருக்கு கல்வி கட்டணத்தொகையாக ரூ.4129.48 இலட்சம் மருத்துவ கல்வி இயக்ககத்திற்கு ஈடு செய்யப்பட்டது.

**(ii) கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டங்களின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் மற்றும் பயனடைந்தோர் விவரம்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் | |
|---|---|---|---|
| | | செயல் | நிதி |
| 1 | 2019-20 | 740732 | 19006.96 |
| 2 | 2020-21 | 743853 | 16270.01 |
| 3 | 2021-22 | 714516 | 19672.16 |
| 4 | 2022-23 | 779021 | 24351.09 |
| 5 | 2023-24 | 551982 | 15520.74 |

**(iii) ஒன்றிய அரசின் கல்வி உதவித்தொகை திட்டங்கள்**

தமிழ்நாட்டிலுள்ள இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஒன்றிய அரசின் படிப்பு உதவித்தொகை திட்டம் 2003-04 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட செலவின விவரம் பின்வருமாறு

**அ. பள்ளி கல்வி உதவித் தொகை திட்டம் (ஒன்றிய மற்றும் மாநில அரசின் பங்கீடு திட்டம்)**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | ஆண்டு | ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|---|
| 1 | 2019-20 | 2470.00 | 2470.00 |
| 2 | 2020-21 | 2840.00 | 2613.50 |
| 3 | 2021-22 | 5389.52 | 653.05 |
| 4 | 2022-23 | 7366.36 | 6647.89* |
| 5 | 2023-24 | 6744.20 | ** |

* இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 9 மற்றும் 10-ஆம் வகுப்பு பயின்ற 3,04,827 மாணவியர் பயனடையும் வகையில் ரூ.12193.08 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டு வருகிறது.

** 2023-24 ஆம் ஆண்டிற்கு தோராயமாக 3,05,000 மாணவிகளுக்கு ரூ. 122 கோடியில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட உள்ளது

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இன மாணவர்களுக்கான பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், 2021-2022ஆம் ஆண்டு வரை 50 சதவீத நிதியுதவி ஒன்றிய அரசினாலும் 50 சதவீத நிதியுதவி மாநில அரசினாலும் வழங்கப்பட்டு வந்தது. 2022-23 ஆம் ஆண்டு முதல் இந்த நிதியுதவியானது 60:40 (ஒன்றிய அரசு:மாநில அரசு) என்ற விகிதமாக மாற்றப்பட்டுள்ளது.

தற்போது ஒன்றிய அரசின் திருத்திய வழிகாட்டி நெறிமுறைகளின்படி, 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல், பள்ளிபடிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், பெற்றோரது ஆண்டு வருமானம் 2.5 இலட்சம் மற்றும் அதற்கும் குறைவாக உள்ள அரசுப் பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த பெண் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை ரூ.4,000/- வழங்கப்பட்டு வருகிறது.

**ஆ. பள்ளி மேற்படிப்பு உதவித்தொகை திட்டம்**

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இன மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், 2021-2022-ஆம் ஆண்டுவரை 100 சதவீத நிதியுதவி ஒன்றிய அரசினால் வழங்கப்பட்டு வந்தது. தற்போது இந்த நிதியுதவியானது 60:40 (ஒன்றிய அரசு : மாநில அரசு) என்ற விகிதமாக மாற்றப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | ஆண்டு | ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|---|
| 1 | 2019-20 | 7575.00 | 7575.00 |
| 2 | 2020-21 | 11481.00 | 11481.00 |
| 3 | 2021-22 | 16079.00 | 16079.00 |
| 4 | 2022-23 | 13828.54 | 13828.54 |
| 5. | 2023-24 | 22500.00 | 22500.00* |

* இத்திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் 2,21,909 மாணவ, மாணவியர்களுக்கு இதுவரை ரூ.10347.55 இலட்சத்திற்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டும் மீத மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**இ. சிறந்த பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டம் (Top – Class School Education Scheme for OBC, EBC and DNT Students)**

மத்திய அரசின் 100 சதவீத நிதி பங்களிப்புடன் தலைசிறந்த பள்ளிகளில் பயிலும் இதர பிற்படுத்தப்பட்டோர், பொருளாதாரத்தில் பின்தங்கியோர் அல்லது சீர்மரபின பழங்குடியின மாணவ/மாணவியருக்கான பள்ளிப்படிப்புத் திட்டம் 2022-2023 ஆம் நிதியாண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய கல்வி உதவித்தொகை இணையதளம் (NSP) முலமாக மத்திய அரசால் பட்டியலிடப்பட்ட பள்ளியில் பயிலும் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இத்திட்டத்தின்கீழ், பள்ளியில் வசூலிக்கப்படும் கற்பிப்புக் கட்டணம்,விடுதிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு ஆண்டொன்டிற்கு அதிகபட்சமாக ரூ.75,000/- ம், 11 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியருக்கு ஆண்டொன்டிற்கு அதிகபட்சமாக ரூ.1,25,000/- மும் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற மாணவ/மாணவியர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரு.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**5. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்**

பிரமலைக் கள்ளர் வகுப்பினர் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் அதிக அளவில் வசித்து வருகின்றனர். இம்மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக இம்மூன்று மாவட்டங்களிலும் 299 கள்ளர் பள்ளிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அப்பள்ளிகளில் மொத்தம் 26,154 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர்.

(i) **கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் விவரம்**

| வகைப்பாடு | மாவட்டம் | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | மதுரை | தேனி | திண்டுக்கல் | |
| தொடக்கப்பள்ளிகள் | 105 | 62 | 46 | 213 |
| நடுநிலைப்பள்ளிகள் | 10 | 7 | 5 | 22 |
| உயர்நிலைப்பள்ளிகள் | 13 | 4 | 3 | 20 |
| மேனிலைப்பள்ளிகள் | 21 | 11 | 8 | 40 |
| உண்டு உறைவிடப் பள்ளிகள் | 2 | 1 | 1 | 4 |
| **மொத்தம்** | **151** | **85** | **63** | **299** |

**(ii) கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ/மாணவியர் எண்ணிக்கை**

| வ. எண் | பள்ளிகளின் விவரம் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணாக்கர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மாணவர்கள் | மாணவிகள் | மொத்தம் |
| 1 | தொடக்கப்பள்ளிகள் (15 தொடக்கப்பள்ளிகளில் மழலையர் வகுப்பு (LKG) உட்பட) | 213 | 4603 | 4558 | 9161 |
| 2 | நடுநிலைப் பள்ளிகள் | 22 | 720 | 774 | 1494 |
| 3 | உயர்நிலைப்பள்ளிகள் | 20 | 1182 | 1002 | 2184 |
| 4 | மேல்நிலைப்பள்ளிகள் | 40 | 6945 | 6072 | 13017 |
| 5. | உண்டு உறைவிடப்பள்ளிகள் | 4 | 154 | 144 | 298 |
| | **மொத்தம்** | **299** | **13604** | **12550** | **26154** |

**(iii) கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஆங்கில வழிக்கல்வி**

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் (LKG) முதல் 10-ஆம் வகுப்பு வரை ஆங்கில வழிக்கல்வி (English medium) நடைபெற்று வருகின்றது. ஆங்கில வழி வகுப்புகளில் 2023 – 2024 ஆம் கல்வியாண்டில் 1,422 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். அவ்விவரம் பின்வருமாறு:

| மாவட்டம் | மழலையர் வகுப்பு (LKG) | | | மழலையர் வகுப்பு (UKG) | | | 1 முதல் 5 ஆங்கில வழி | | | 6 முதல் 10 ஆங்கில வழி | | | பெரு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாணவர்கள் | மாணவியர்கள் | மொத்தம் | மாணவர்கள் | மாணவியர்கள் | மொத்தம் | மாணவர்கள் | மாணவியர்கள் | மொத்தம் | மாணவர்கள் | மாணவியர்கள் | மொத்தம் | |
| மதுரை | 42 | 32 | **74** | 56 | 54 | **110** | 63 | 68 | **131** | 148 | 128 | **276** | 591 |
| தேனி | 32 | 46 | **78** | 52 | 45 | **97** | 54 | 52 | **106** | 129 | 96 | **225** | 506 |
| திண்டுக்கல் | 16 | 33 | **49** | 24 | 23 | **47** | 37 | 53 | **90** | 61 | 78 | **139** | 325 |
| மொத்தம் | **90** | **111** | **201** | **132** | **122** | **254** | **154** | **173** | **327** | **338** | **302** | **640** | **1422** |

**(iv) 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளின் தேர்ச்சி விழுக்காடு.**

**2022-2023 ஆம் கல்வியாண்டில்**

| வ. எண் | மாவட்டம் | 10 ஆம் வகுப்பு | | | 11 ஆம் வகுப்பு | | | 12 ஆம் வகுப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தேர்வு எழுதியோர் | தேர்ச்சி பெற்றோர் | தேர்ச்சி விழுக்காடு | தேர்வு எழுதியோர் | தேர்ச்சி பெற்றோர் | தேர்ச்சி விழுக்காடு | தேர்வு எழுதியோர் | தேர்ச்சி பெற்றோர் | தேர்ச்சி விழுக்காடு |
| 1 | மதுரை | 1278 | 1210 | 94.7 | 1085 | 989 | 91.2 | 986 | 950 | 96.3 |
| 2 | தேனி | 426 | 379 | 89.0 | 436 | 373 | 85.6 | 434 | 392 | 90.3 |
| 3 | திண்டுக்கல் | 407 | 367 | 90.2 | 256 | 232 | 90.6 | 292 | 282 | 96.6 |
| | **மொத்தம்** | **2111** | **1956** | **92.6** | **1777** | **1594** | **89.7** | **1712** | **1624** | **94.8** |

**2023-2024 ஆம் கல்வியாண்டில்**

| வ. எண் | மாவட்டம் | 10 ஆம் வகுப்பு | | | 11 ஆம் வகுப்பு | | | 12 ஆம் வகுப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தேர்வு எழுதியோர் | தேர்ச்சி பெற்றோர் | தேர்ச்சி விழுக்காடு | தேர்வு எழுதியோர் | தேர்ச்சி பெற்றோர் | தேர்ச்சி விழுக்காடு | தேர்வு எழுதியோர் | தேர்ச்சி பெற்றோர் | தேர்ச்சி விழுக்காடு |
| 1 | மதுரை | 1362 | 1293 | 94.93 | 1136 | 1064 | 93.66 | 1032 | 994 | 96.31 |
| 2 | தேனி | 438 | 402 | 91.78 | 416 | 358 | 86.06 | 416 | 394 | 94.71 |
| 3 | திண்டுக்கல் | 445 | 388 | 87.19 | 309 | 276 | 89.32 | 240 | 230 | 95.83 |
| | **மொத்தம்** | 2245 | 2083 | 92.78 | 1861 | 1698 | 91.24 | 1688 | 1618 | 95.85 |

**(v) 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் ஒவ்வொரு பாடப் பிரிவிலும் மாணவ / மாணவியரை 100 விழுக்காடு தேர்ச்சி பெறச் செய்யும் பட்டதாரி / முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்**

| வ. எண் | ஆசிரியர் விவரம் | 2019-20 ஆம் நிதி ஆண்டு | | 2020-21 ஆம் நிதி ஆண்டு | | 2022-23 ஆம் நிதி ஆண்டு | | 2023-24ஆம் நிதி ஆண்டு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | செலவினம் (ரூ) | எண்ணிக்கை | செலவினம் (ரூ) | எண்ணிக்கை | செலவினம் (ரூ) | எண்ணிக்கை | செலவினம் (ரூ) |
| 1 | பட்டதாரி ஆசிரியர் | 191 | 955000 | - | - | 169 | 845000 | 181 | 905000 |
| 2 | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | 271 | 1355000 | 235 | 1175000 | 197 | 985000 | 217 | 1085000 |
| | **மொத்தம்** | **462** | **2310000** | **235** | **1175000** | **366** | **1830000** | **398** | **1990000** |

(குறிப்பு: 2020-2021 ஆம் கல்வியாண்டில் கொரோனா பெருந்தொற்று காரணமாக 10ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் அனைத்து மாணவ/மாணவியர்களும் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்று விட்டதாக தமிழக அரசு அறிவித்ததை தொடர்ந்து 2021-2022 ஆம் ஆண்டில் பட்டதாரி ஆசிரியர், முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு பரிசுத் தொகை வழங்கப்படவில்லை.)

**(vi) 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாக தேர்ச்சி விழுக்காடு அடையச் செய்யும் அரசு கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கும் திட்டம்.**

| வ. எண் | நிதி ஆண்டு | 10-ஆம் வகுப்பு | | 12-ஆம் வகுப்பு | |
|---|---|---|---|---|---|
| | | பயனாளிகள் | செலவினம் (ரூ) | பயனாளிகள் | செலவினம் (ரூ) |
| 1 | 2018-2019 | 40 | 400000 | 18 | 180000 |
| 2 | 2019-2020 | 39 | 390000 | 28 | 280000 |
| 3 | 2020-2021 | - | - | 17 | 170000 |
| 4 | 2022-2023 | 40 | 400000 | 24 | 240000 |
| 5 | 2023-2024 | 30 | 300000 | 23 | 230000 |

(குறிப்பு: 2020-2021 ஆம் கல்வியாண்டில் கொரோனா பெருந்தொற்று காரணமாக 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் அனைத்து மாணவ/மாணவியர்களும் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்று விட்டதாக தமிழக அரசு அறிவித்ததை தொடர்ந்து 2021-2022 ஆம் ஆண்டில் உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு பரிசுத் தொகை வழங்கப்படவில்லை.)

**(vii) அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளிக் கட்டடங்களில் பழுது பார்ப்புப் பணிகள்**

கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக ஆண்டுதோறும் ரூ.100 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. 2023-2024 ஆம் ஆண்டில் 29 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ரூ.99.54 இலட்சம் செலவில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ரூ.4.98 கோடி செலவில் 144 கள்ளர் சீரமைப்பு பள்ளி கட்டடங்களின் சுவர்களுக்கு

வர்ணம் பூசுதல் மற்றும் டைல்ஸ் பதித்தல் போன்ற பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(viii) ஊரக அடிப்படை வசதி வளர்ச்சி நிதி (RIDF) திட்டத்தின் கீழ் நபார்டு வங்கியின் மூலம் நிதி உதவி பெற்று பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல்**

2021-2022-ஆம் ஆண்டிற்கான நபார்டு RIDF XXVII திட்டத்தின் கீழ் 92 அரசு கள்ளர் பள்ளிகளுக்கு ரூ.5,009.18 இலட்சம் செலவில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர நபார்டு வங்கியிடமிருந்து நிதி உதவி பெற்று உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர அரசாணை வெளியிடப்பட்டு, 86 பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(ix) கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிருவாக செலவின விவரம்**

**(ரூபாய் இலட்சத்தில்)**

| ஆண்டு | செலவு |
|---|---|
| 2019-20 | 11780.62 |
| 2020-21 | 12169.78 |
| 2021-22 | 12091.30 |
| 2022-23 | 14620.89 |
| 2023-24 | 15210.42 |

**6. சீருடைகள் வழங்குதல்**

விடுதிகளில் தங்கி பயிலும் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியருக்கு 4 இணை சீருடைகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. கடந்த 5 ஆண்டுகளில் பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் பின்வருமாறு:

**(ரூ. இலட்சத்தில்)**

| ஆண்டு | பயனடைந்தோர் எண்ணிக்கை | | | செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|
| | பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| 2018-19 | 20291 | 17517 | 37808 | 244.98 | 224.73 | 469.71 |
| 2019-20 | 19750 | 18811 | 38561 | 275.50 | 264.40 | 539.90 |
| 2021-22 | 15603 | 10088 | 25691 | 133.37 | 223.59 | 356.96 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2022-23 | 16536 | 13582 | 30118 | 205.02 | 152.45 | 357.47 |
| 2023-24 | 20755 | 19521 | 40276 | 248.25 | 240.42 | 488.67 |

## 7. விடுதிகள்

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியரின் நலனுக்காக மொத்தம் 1,351 விடுதிகள் இயங்கி வருகின்றன. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 725 விடுதிகளும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 609 விடுதிகளும் இயங்கி வருகின்றன. சிறுபான்மையினர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 17 விடுதிகள் உள்ளன. மேற்காணும் 1,351 விடுதிகளில் 87,099 மாணவ, மாணவியர் தங்கிப் பயிலுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### (i) விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவ/ மாணவியரின் விவரம்

| வ. எண் | துறை | விடுதிகள் | விடுதிகளின் எண்ணிக்கை | | | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1 | **பிவ** | கல்லூரி | 86 | 65 | 151 | 7840 | 5160 | 13000 |
| | | பள்ளி | 369 | 205 | 574 | 20940 | 11520 | 32460 |
| | | மொத்தம் | **455** | **270** | **725** | **28780** | **16680** | **45460** |
| 2. | **மிபிவ** | கல்லூரி | 51 | 53 | 104 | 4350 | 4815 | 9165 |
| | | பள்ளி | 236 | 113 | 349 | 12700 | 6225 | 18925 |
| | | மொத்தம் | **287** | **166** | **453** | **17050** | **11040** | **28090** |
| 3 | **சீம** | கல்லூரி | 13 | 9 | 22 | 1105 | 740 | 1845 |
| | | பள்ளி | 87 | 47 | 134 | 6814 | 3490 | 10304 |
| | | மொத்தம் | **100** | **56** | **156** | **7919** | **4230** | **12149** |
| 4 | **சிந** | கல்லூரி | 1 | 12 | 13 | 100 | 950 | 1050 |
| | | பள்ளி | 0 | 4 | 4 | 0 | 350 | 350 |
| | | மொத்தம் | **1** | **16** | **17** | **100** | **1300** | **1400** |
| 5 | **பெரு மொத்தம்** | கல்லூரி | 151 | 139 | 290 | 13395 | 11665 | 25060 |
| | | பள்ளி | 692 | 369 | 1061 | 40454 | 21585 | 62039 |
| | | **மொத்தம்** | **843** | **508** | **1351** | **53849** | **33250** | **87099** |

**விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவ, மாணவியர் எண்ணிக்கை**

| வ. எண் | துறை | விடுதிகள் | மாணவர்கள் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1 | பிவ | கல்லூரி | 7638 | 5251 | 12889 |
| | | பள்ளி | 18744 | 10244 | 28988 |
| | | மொத்தம் | 26382 | 15495 | 41877 |
| 2 | மிபிவ | கல்லூரி | 4380 | 4826 | 9206 |
| | | பள்ளி | 11687 | 5735 | 17422 |
| | | மொத்தம் | 16067 | 10561 | 26628 |
| 3 | சீம | கல்லூரி | 869 | 817 | 1686 |
| | | பள்ளி | 4749 | 2737 | 7486 |
| | | மொத்தம் | 5618 | 3554 | 9172 |
| 4 | **சிந** | கல்லூரி | 89 | 860 | 949 |
| | | பள்ளி | 0 | 224 | 224 |
| | | மொத்தம் | 89 | 1084 | 1173 |
| கல்லூரி | | | 12976 | 11754 | 24730 |
| பள்ளி | | | 35180 | 18940 | 54120 |
| **மொத்தம்** | | | **48156** | **30694** | **78850** |

ii) **விடுதிகளில் மாணவ, மாணவியரைச் சேர்த்தல்**

| | |
|---|---|
| பள்ளி விடுதிகள் | 4 முதல் 12 ஆம் வகுப்பு வரை |
| கல்லூரி விடுதிகள் | ஐ.டி.ஐ, பட்டயம், பட்ட மற்றும் முதுநிலை படிப்பு |

iii) **உணவுக் கட்டணம்**

பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு உணவுக் கட்டணம் மாதமொன்றுக்கு ரூ.1000-லிருந்து ரூ.1,400 ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.1100-லிருந்து ரூ.1,500 ஆகவும் 23.01.2024 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. ஒரு ஆண்டில் 10 மாதங்களுக்கு உணவுக்கட்டணம் வழங்கப்படுகிறது.

**(iv) பண்டிகைக் கால சிறப்பு உணவுகள்**

பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு பண்டிகைக் காலங்களில் சிறப்பு உணவு வழங்கப்படுவதற்காக ஒரு பண்டிகைக்கு சிறப்பு உணவுக் கட்டணமாக ரூ.40/-ம், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ஒரு பண்டிகைக்கு சிறப்பு உணவுக் கட்டணமாக ரூ.80/-ம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(v) மாதாந்திர பல்வகை செலவினத் தொகை**

2021-2022 ஆம் ஆண்டு முதல் விடுதி மாணவ, மாணவியருக்கு சோப்பு, பற்பசை போன்றவற்றுக்காக வழங்கப்பட்டு வரும் மாதாந்திர பல்வகை செலவினத் தொகை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 75 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**(vi) மாநில அளவில் விடுதி பணியாளர்களுக்கு விருது/பரிசு வழங்கும் திட்டம்**

விடுதிகளை சுகாதாரமான முறையில் பராமரிக்கும் காப்பாளர்கள்/ காப்பாளினிகள் மற்றும் இதர பணியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, மாநில அளவில் 3 சிறந்த விடுதிகளை தேர்ந்தெடுத்து கேடயம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. மேலும், அவ்விடுதிகளில் பணியாற்றும் காப்பாளர்கள் உள்ளிட்ட பணியாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுகளின் விவரம் பின்வருமாறு:

**சிறந்த 3 விடுதிகளில் பணியாற்றும் காப்பாளர், காப்பாளினிகள்/ காவலர் மற்றும் ஏவலர் / சமையலர்கள் / தூய்மைப்பணியாளர் ஆகியோருக்கு பரிசுத்தொகைகள் வழங்குதல்**

| வ. எண். | பணியாளர் | முதல் பரிசு ரூ. | இரண்டாம் பரிசு ரூ. | மூன்றாம் பரிசு ரூ. |
|---|---|---|---|---|
| 1 | போதகக் காப்பாளர் / காப்பாளினி இடைநிலைக்காப்பாளர்/ காப்பாளினி | 20,000 | 15,000 | 10,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | காவலர் மற்றும் ஏவலர் | 10,000 | 5,000 | 3,000 |
| 3 | சமையலர் *1 | 10,000 | 5,000 | 3,000 |
| 4 | சமையலர் *2 | 10,000 | 5,000 | 3,000 |
| 5 | தூய்மைப்பணியாளர் | 5,000 | 3,000 | 2,000 |

மாநில அளவில் 3 சிறந்த விடுதிகளுக்கு கேடயம் மற்றும் நினைவுப் பரிசு வழங்க ஏற்படும் செலவினம்

| **முதல் பரிசு ரூ.** | **இரண்டாம் பரிசு ரூ.** | **மூன்றாம் பரிசு ரூ.** |
|---|---|---|
| 10,000 | 5,000 | 3,000 |

சால்வை, சான்றிதழ் மற்றும் இதர செலவினங்களுக்காக – ரூ. 10,000/-

கடந்த 5 ஆண்டுகளின் செலவின விவரம் பின்வருமாறு.

(ரூ. இலட்சத்தில்)

| **ஆண்டு** | **செலவினம்** |
|---|---|
| 2019-20 | 1.37 |
| 2020-21 | 1.37 |
| 2021-22 | 1.37 |
| 2022-23 | 1.37 |
| 2023-24 | 1.37 |

**(vii) மாவட்ட அளவிலான பரிசுகள்**

விடுதிகள் சிறப்பாகச் செயல்படுவதை ஊக்கப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் நல விடுதிகளுள் 3 விடுதிகளையும், கள்ளர் சீரமைப்பு விடுதிகளுள் 3 விடுதிகளையும் தேர்வு செய்து நினைவுப் பரிசும் காப்பாளர்/காப்பாளினிகளுக்கு பரிசுகளும் வழங்கும் புதிய திட்டம் 2021-2022ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. காப்பாளர்/ காப்பாளினிகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ரூ.10,000/-, ரூ.5,000/- மற்றும் ரூ.3,000/- வழங்கப்படுகிறது.

**(viii) விடுதிகளின் நிர்வாகச் செலவினங்களுக்காக கடந்த 5 ஆண்டுகளின் செலவின விவரம்.**

(ரூ. இலட்சத்தில்)

| ஆண்டு | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
|---|---|---|---|
| 2019-20 | 14844.56 | 12277.53 | 27122.09 |
| 2020-21 | 10859.70 | 8632.40 | 19492.10 |
| 2021-22 | 12898.76 | 10441.57 | 23340.33 |
| 2022-23 | 16087.52 | 12913.73 | 29001.25 |
| 2023-24 | 17692.32 | 11521.92 | 29214.24 |

**(ix) ஒன்றிய மற்றும் மாநில அரசின் பங்களிப்புடன் கட்டப்பட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ஆண்டுவாரியாக செலவின விவரம்**

| ஆண்டு | ஒன்றிய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒன்றிய அரசால் விடுவிப்பு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | விடுதிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2012-13 | 276.37 | 276.37 | 5 |
| 2013-14 | 805.00 | 805.00 | 14 |
| 2014-15 | 470.17 | 446.66 | 6 |
| 2015-16 | 456.43 | 228.21 | 5 |
| 2019-20, & 2020 -21 | 2115.00 | 1582.50 | 12 |
| 2021-22 | 1170.00 | 585.00 | 5 |
| 2022-23 | ஒன்றிய அரசால் நிதி ஏதும் விடுவிக்கப்படவில்லை. | | |

ஒன்றிய, மாநில அரசு பங்கீட்டின் கீழ் கட்டப்படும் விடுதிகளுக்கு 2014-15 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசு அதன் பங்கீடாக மாணவர் விடுதிகளுக்கு 60% ம், மாணவியர் விடுதிகளுக்கு 90% ம் மொத்த மதிப்பீட்டு தொகையில் வழங்கி வருகிறது.

**8. உணவு மானியம் வழங்குதல்**

அரசால் அங்கீகரிக்கப்பட்டு தனியாரால் நிர்வகிக்கபட்டுவந்த 39 மாணவர் இல்லங்களில் தற்போது 15 விடுதிகள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் தங்கி கல்வி பயிலும் பிவ / மிபிவ / சீம

மாணவ / மாணவியருக்கு, நிர்ணயிக்கப்பட்ட கட்டண வீதத்தில் உணவு மானியம் வழங்கப்படுகிறது. பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகைப்படாத மாணவ, மாணவியருக்கு இம்மானியத் தொகை வழங்கப்படுகின்றது. மாதாந்திர உணவு மானியம் ரூ.1000 வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் பின்வருமாறு :

| ஆண்டு | பயனடைந்தோர் | | | செலவினம் (ரூ.இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | பிவ | மிபிவ/சீ | மொத்த | பிவ | மிபிவ/சீ | மொத்தம் |
| 2019-20 | 486 | 466 | 952 | 43.81 | 42.00 | 85.81 |
| 2020-21 | 486 | 466 | 952 | 9.18 | 7.32 | 16.50 |
| 2021-22 | 480 | 500 | 980 | 16.39 | 14.60 | 30.99 |
| 2022-23 | 359 | 374 | 733 | 37.96 | 32.63 | 70.59 |
| 2023-24 | 426 | 374 | 800 | 39.87 | 33.35 | 73.22 |

**9. இலவச மிதிவண்டிகள் வழங்குதல்**

அரசு, அரசு நிதியுதவி மற்றும் பகுதி நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியருக்கு வருமான உச்சவரம்பின்றி விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள விடுதி உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுவதில்லை. இத்திட்டத்தின் கீழ் 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் கல்வி ஆண்டில் அரசு/ அரசு உதவி பெறும் மற்றும் பகுதி உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயின்ற 7,25,419 பிவ, மிபிவ, சீம மாணவ, மாணவியருக்கு ரூ.35017.19 இலட்சம் மதிப்பீட்டில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுவிட்டது.

(ரூபாய் இலட்சத்தில்)

| விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்ட விவரம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை | | | | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை | | | | மொத்த மாணவ/மாணவியரின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட மொத்த தொகை |
| ஆண்டு | மாணவர் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை | மாணவியர் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை | மாணவர் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை | மாணவியர் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை | | |
| 2013-14 | 108314 | 3699.35 | 143561 | 4797.18 | 89742 | 3119.61 | 108747 | 3752.91 | 450364 | 15369.05 |
| 2014-15 | 101267 | 3671.36 | 133652 | 4718.67 | 85388 | 2979.66 | 103539 | 3512.55 | 423846 | 14882.24 |
| 2015-16 | 107735 | 3990.81 | 139396 | 5167.37 | 96435 | 3431.16 | 111005 | 4049.19 | 455471 | 16638.59 |
| 2016-17 | 100480 | 4114.36 | 129964 | 5204.69 | 92668 | 3560.20 | 117757 | 4436.23 | 440869 | 17315.48 |
| 2017-18 &2018-19 | 165889 | 5923.52 | 229311 | 7966.95 | 150844 | 5679.67 | 193592 | 7113.20 | 739636 | 26683.34 |
| 2019-20 | 80947 | 3272.68 | 109351 | 4222.04 | 75988 | 3072.19 | 96207 | 3714.55 | 362493 | 14281.48 |
| 2020-21 | 85178 | 3443.74 | 113028 | 4374.98 | 80512 | 3255.10 | 98568 | 3805.71 | 377286 | 14879.34 |
| 2021-22 | 105784 | 5474.32 | 119220 | 5951.46 | 101967 | 5276.79 | 108653 | 5423.95 | 435624 | 22126.53 |
| 2022-23 | 73903 | 3621.24 | 103886 | 4944.97 | 71091 | 3483.45 | 95264 | 4534.56 | 344144 | 16584.24 |
| 2023-24 | 87383 | 4298.72* | 111398 | 5331.75* | 82379 | 4036.06* | 100115 | 4766.42* | 381275 | 18432.51 |

* முந்தைய ஆண்டுகளில் நிலுவைத் தொகையும் சேர்த்து செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 10. சீர்மரபினர் நல வாரியம்

சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்காக அரசு வழங்கும் பல்வேறு நலத்திட்டங்களை அவர்களுக்கு வழங்குவதற்கு "சீர்மரபினர் நல வாரியம்" 2007-ஆம் ஆண்டில் அரசால் அமைக்கப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டில் 379 நபர்கள் புதிய உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு, இவ்வாரியத்தில் இதுவரை மொத்தம் 38,496 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இதுவரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 4,258 உறுப்பினர்களுக்கு ரூ.152.31 இலட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகளின் செலவின விவரம் பின்வருமாறு :

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | செலவு |
|---|---|
| 2019-20 | 9.83 |
| 2020-21 | 2.77 |
| 2021-22 | 14.33 |
| 2022-23 | 27.33 |
| 2023-24 | 29.02 |

வலையர், அம்பலக்காரர் (சேர்வை உட்பட) இனத்தைச் சேர்ந்த மக்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்த வலையர், அம்பலக்காரர் (சேர்வை உட்பட) புனரமைப்பு வாரியம் அமைத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

**11. நரிக்குறவர் நல வாரியம்**

நரிக்குறவர்களுக்கு கல்வி, மாற்றுத்தொழில் புரிவதற்கான உதவி மற்றும் அவர்களுக்கு பல்வேறு நல உதவிகள் வழங்குவதற்காக தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் கடந்த 2008-09 ம் ஆண்டில் அரசால் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டில் 234 நபர்கள் புதிய உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு, இவ்வாரியத்தில் இதுவரை மொத்தம் 16,010 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இதுவரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 14,308 உறுப்பினர்களுக்கு ரூ.811.27 இலட்சம் மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகளின் செலவின விவரம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | செலவு |
|---|---|
| 2019-20 | 18.36 |
| 2020-21 | 8.25 |
| 2021-22 | 17.14 |

| | |
|---|---|
| 2022-23 | 12.79 |
| 2023-24 | 15.95 |

தற்போது நரிக்குறவன், குருவிக்காரன் இனத்தினை பழங்குடியினர் பட்டியலில் 37வது இனமாக சேர்த்து இந்திய அரசிதழில் 03.01.2023-ல் அறிவிக்கை செய்யப்பட்டு, அரசாணை நிலை எண்.38, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(CV 1) துறை, நாள். 17,03.2023-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.69, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3(2))துறை, நாள்.23.08.2023-ன் படி மிபிவ (ம) சீம நலத்துறையின் கீழ் செயல்பட்டு வந்த 'தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்' ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டு, இவ்வாரியத்தின் பொருண்மைகள் ஒப்படைக்கப்பட்டன.

**12. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது**

தமிழ்நாட்டில் சமூக நீதிக்காகப் போராடியவர்களை சிறப்பு செய்யும் பொருட்டு ஆண்டு தோறும் சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதினை அரசு வழங்கி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படும் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. இவ்விருது பெறுபவருக்கு விருது தொகையாக 1 இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு வந்தது. இவ்விருதுத் தொகை 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டு, இவ்விருது பெறுபவருக்கு ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ரூ.5 இலட்சம் விருதுத் தொகையும் வழங்கப்படுகிறது. 2023 ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது திரு.சுப.வீரபாண்டியன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 13. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த கிராமப்புற மாணவியருக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்குதல்

கிராமப்புறங்களிலுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவியர் தங்களது தொடக்கக் கல்வியினை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை ஆண்டுக்கு ரூ.500/-, 6ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு ரூ.1000/- ம் ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் 1999-2000 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000 லிருந்து ரூ.1 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் பயனடைந்த மாணவியர் எண்ணிக்கை மற்றும் செலவின விவரம் பின்வருமாறு:-

(ரூ. இலட்சத்தில்)

| ஆண்டு | பயனடைந்தோர் எண்ணிக்கை | செலவினம் |
|---|---|---|
| 2019-20 | 256556 | 1584.61 |
| 2020-21 | 264898 | 1655.69 |
| 2021-22 | 271641 | 1674.00 |
| 2022-23 | 285959 | 1816.90 |
| 2023-24 | 257466 | 1630.27 |

## 14. மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் வழங்குதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மக்கள் சுய தொழில் செய்து பொருளாதார நிலையை மேம்படுத்திட மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சமாகும்.

கடந்த 5 ஆண்டுகளில் இத்திட்டத்தின் செயலாக்க விவரம் பின்வருமாறு :

(ரூ. இலட்சத்தில்)

| ஆண்டு | தையல் இயந்திரங்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| 2019-20 | 3000 | 135.00 |
| 2020-21 | 3000 | 164.00 |
| 2021-22 | 3000 | 180.00 |
| 2022-23 | 2000 | 129.80 |
| 2023-24 | | |

## 14.1. ஆயத்த ஆடை உற்பத்தி அலகு அமைத்தல்

2022-2023 ஆம் ஆண்டில், 25 ஆயத்த ஆடை உற்பத்தி அலகுகள் ரூ.75 இலட்சம் மதிப்பில் அமைக்கப்படுவதற்கான புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பை சார்ந்த தையல் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களில் ஒரு குழுவிற்கு 10 பேர் வீதம் இணைந்து ஒரு ஆயத்த ஆடை உற்பத்தி அலகு அமைப்பதற்கு ரூ.3 இலட்சம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளியின் ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2022-2023 ஆம் ஆண்டில் 25 ஆயத்த ஆடை உற்பத்தி அலகு அமைப்பதற்கு ரூ.75 இலட்சமும், 2023-2024 ஆம் ஆண்டில் 10 ஆயத்த ஆடையக உற்பத்தி அலகு அமைப்பதற்கு ரூ.30 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

## 15. பித்தளை தேய்ப்புப் பெட்டி வழங்குதல்

சலவைத் தொழில் புரியும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மக்கள் சுய தொழில் செய்து பொருளாதார நிலையை மேம்படுத்திட பித்தளை தேய்ப்புப்

பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சமாகும்.

கடந்த 5 ஆண்டுகளில் இத்திட்டத்தின் செயலாக்க விவரம் பின்வருமாறு :

(ரூ. இலட்சத்தில்)

| ஆண்டு | சலவைப் பெட்டிகளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| 2019-20 | 2238 | 109.00 |
| 2020-21 | 2238 | 109.00 |
| 2021-22 | 3000 | 146.13 |
| 2022-23 | 1085 | 71.08 |
| 2023-24 | 977 | 71.13 |

### 15.1 நவீன சலவையக அலகுகள் அமைத்தல்

2022-2023 ஆம் ஆண்டில், 25 நவீன சலவையக அலகுகள் ரூ.75 இலட்சம் மதிப்பில் அமைக்கப்படுவதற்கான புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பை சார்ந்த சலவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களில் ஒரு குழுவிற்கு 10 பேர் வீதம் இணைந்து ஒரு நவீன சலவையகம் அமைப்பதற்கு ரூ.3 இலட்சம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளியின் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2022-2023 ஆம் ஆண்டில் 4 நவீன சலவையக அலகு அமைப்பதற்கு ரூ.12 இலட்சமும், 2023-2024 ஆம் ஆண்டில் 2 நவீன சலவையக அலகு அமைப்பதற்கு ரூ.6 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

## 16. இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குதல்

வீடற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு விலையில்லா வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கான பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000/- லிருந்து ரூ.1 இலட்சமாக 2021-2022-ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் :

(ரூ. இலட்சத்தில்)

| ஆண்டு | பயனடைந்தோர் எண்ணிக்கை | செலவினம் |
|---|---|---|
| 2019-20 | 300 | 123.55 |
| 2020-21 | 548 | 344.43 |
| 2021-22 | 315 | 293.71 |
| 2022-23 | 47 | 39.50 |
| 2023-24 | 518 | 223.70 |

## 17. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4)-இன் கீழ் கூறு 340 உடன் படிக்கப்பட்டு ஒரு நிலையான அமைப்பாக ஏற்படுத்தப்பட்டு, 15.03.1993 அன்று முதல் உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

இவ்வாணையம் 17.11.2022 அன்று முதல் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் திரு.வீ.பாரதிதாசன் அவர்கள் தலைமையில் மூன்று ஆண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

### ஆணையத்தின் பணிகள்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் ஆய்வு எல்லைகளாவன:-

(1) பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்த்திருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்த முறையீடுகள் ஆகியவற்றைப் பெறுதல், ஆய்வு செய்தல் மற்றும் அதன்மீது பரிந்துரைகளை வழங்குதல்.

(2) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்.

(3) கிறித்துவர், இஸ்லாமியர் மற்றும் பிற சிறுபான்மையினர் சமுதாயங்களுக்கு, சமூக மற்றும் கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட நிலையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்குதல் குறித்து ஆணையம் பரிந்துரை செய்தல்.

(4) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் வகைப்பாடு மற்றும் உள்-வகைப்பாடு செய்தல் தொடர்பாக அரசமைப்புச் சட்டத்தின் கூறுகள் மற்றும் தொடர்புடைய உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆணையத்தின் அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

(5) பல்வேறு சமுதாயங்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்யும் நோக்கில், அரசால் அறிவிக்கப்பட்டு நடைமுறையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பட்டியல்களில் இடம்பெற்றுள்ள சமுதாயங்களின் தற்போதைய நிலையை ஆராயத்தக்க புள்ளிவிவரங்களை சேகரிப்பதற்காக ஆணையம் தனிப்பட்ட ஆய்வுகள் நடத்தியும், மதிப்பீடுகள் செய்தும் அதன் பரிந்துரைகளை அரசுக்கு வழங்குதல்.

(6) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருண்மைகள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்குதல்.

12.1.2023 அன்று நிர்ணயிப்பட்டுள்ள கூடுதல் செயல்வரம்புகளின்படி, சி.ஏ. எண்.2600/2022 என்ற வழக்கில் 31.3.2022 அன்று உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், குறிப்பாக அதன் பத்திகள் 68 மற்றும் 73-இல், குறிப்பிட்டவற்றின் அடிப்படையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் சமுதாயங்களுக்குள் உள்ஒதுக்கீடு வழங்கக் கோரும் முறையீடுகளை ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கை அளிக்க கோரப்பட்டுள்ளது. 11.7.2024-க்குள் ஆணையம் அறிக்கை அளிக்கக் கோரி காலவரம்பு நீட்டிக்கப்பட்டுள்ளது.

**18. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம், 1982 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த தனிநபர் மற்றும் குழுக்களுக்கு குறைந்த வட்டியில் சாத்தியக்கோரு உள்ள தொழில் மற்றும் வியாபாரம் சார்ந்த திட்டங்களுக்கு நிதி உதவி வழங்கிவருகிறது.

1993-1994 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் முகவராக பணியாற்றி வருகிறது.

1993-94 ஆம் ஆண்டு முதல் இக்கழகத்திற்கு தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம், ரூ.1,18,936.27 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தந்துள்ளது. இதுவரை 5,29,600 பயனாளிகளுக்கு ரூ.1,25,452.55 இலட்சம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்களிப்புடன் வழங்கப்பட்டுள்ளது.

**18.1 கடன் திட்டங்கள்**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தனி நபர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கி வருகிறது. கடன் திட்டங்களுக்கான பயனாளிகளை, அந்தந்த மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான இணைப்பதிவாளர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் மற்றும் அந்தந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட குழு தெரிவு செய்கிறது. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி / கூட்டுறவு நகர வங்கி / தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது.

### 18.1.1 பொது காலக் கடன் திட்டம்

பொதுக்காலக் கடன் திட்டத்தின் கீழ், குறைந்த வட்டி விகிதத்தில் சிறு வர்த்தகம் / வணிகம், விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழில்கள், கைவினை பொருட்கள் மற்றும் மரபுவழிச்சார்ந்த தொழில்கள் செய்வதற்கு கீழ்க்கண்டவாறு கடன் உதவி வழங்கப்படுகிறது.

| வ. எண். | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமானம் உச்ச வரம்பு |
|---|---|---|---|---|
| 1 | ரூ.5 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 6% | 3 முதல் 8 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |
| 2 | ரூ.5 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 7% | | |
| 3 | ரூ.10 இலட்சம் முதல் ரூ.15 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 8% | | |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 92 விழுக்காடாக உள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 833 பயனாளிகளுக்கு ரூ.985.13 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 18.1.2 பெண்களுக்கான புதிய பொற்காலக் கடன் திட்டம்

பெண்களின் சுயசார்பு பண்பினை வளர்க்கும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பெண்கள் சிறுவணிகம் செய்வதற்கு கடன் உதவி வழங்கப்படுகிறது.

| கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமான உச்சவரம்பு |
|---|---|---|---|
| ரூ.2 இலட்சம் வரை | 5% | 3 முதல் 8 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்பச் செலுத்தும் விகிதம் 93 விழுக்காடாக உள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 1080 பயனாளிகளுக்கு ரூ.585.25 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**18.1.3 பெண்களுக்கான நுண் கடன் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர்.

| கடன்தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமான உச்சவரம்பு |
|---|---|---|---|
| ஒரு நபருக்கு ரூ.1.25 இலட்சம் வரை குழுவிற்கு ரூ.15 இலட்சம் வரை | 4% | 4 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்பச் செலுத்தும் விகிதம் 95 விழுக்காடாக உள்ளது.

2023-2024ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 9417.21 பயனாளிகளுக்கு ரூ. 13824 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**18.1.4 ஆண்களுக்கான நுண் கடன் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் ஆண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள்அனுமதிக்கப்படுவர்.

| கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | திரும்ப செலுத்தும் காலம் | ஆண்டு வருமான உச்சவரம்பு |
|---|---|---|---|
| ஒரு நபருக்கு ரூ.1.25 இலட்சம் வரை குழுவிற்கு ரூ.15 இலட்சம் வரை | 5% | 4 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்பச் செலுத்தும் விகிதம் 95 விழுக்காடாக உள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 118 பயனாளிகளுக்கு ரூ.67.69 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 18.1.5 கறவை மாடு வாங்குவதற்கான கடன்

பொது காலக்கடன் திட்ட விதிமுறைகளுக்குட்பட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ளவர்களுக்கு ஒரு கறவை மாட்டிற்கு ரூ.30,000 வீதம் அதிகபட்சம் ரூ.60,000 வரை கடன் வழங்கப்படுகிறது.

| **கடன் தொகை** | **வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு)** | **திரும்ப செலுத்தும் காலம்** | **ஆண்டு வருமானம் உச்சவரம்பு** |
|---|---|---|---|
| ரூ.60,000 (2 கறவை மாடுகளுக்கு) | 6% | 3 ஆண்டுகள் | ரூ.3 இலட்சம் |

இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்பச் செலுத்தும் விகிதம் 98 விழுக்காடாக உள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 987 பயனாளிகளுக்கு ரூ.495.04 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் இக்கழகத்தால் பல்வேறு கடன் திட்டங்களின் கீழ் மொத்தம் 16842 பயனாளிகளுக்கு ரூ. 11550.32 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**2019-20 முதல் 2023-24 வரை வழங்கப்பட்ட கடன் திட்ட விவரங்கள்**

**(ரூபாய் இலட்சத்தில்)**

| **திட்டத்தின் பெயர்** | **2019-20** | | **2020-21** | | **2021-22** | | **2022-23** | | **2023-24** | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பயனாளிகள் | தொகை | பயனாளிகள் | தொகை | பயனாளிகள் | தொகை | பயனாளிகள் | தொகை | பயனாளிகள் | தொகை |
| பொதுக்கால கடன் திட்டம் | 882 | 567.19 | 363 | 381.22 | 401 | 508.58 | 813 | 823.89 | 833 | 985.13 |
| சிறுவணிகக் கடன் திட்டம் | 17828 | 9586.16 | 13683 | 8857.26 | 11853 | 7699.71 | 13784 | 8818.28 | 14929 | 9979.94 |
| பெண்களுக் கான புதிய பொற்காலத் திட்டம் | 239 | 134.58 | 279 | 163.18 | 408 | 213.77 | 554 | 320.35 | 1080 | 585.25 |
| மொத்தம் | **18949** | **10287.93** | **14325** | **9401.66** | **12662** | **8440.06** | **15151** | **9962.52** | **16842** | **11550.32** |

**18.2 சிறு, குறு விவசாயிகளுக்கான நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் :**

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் 2007-2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் / தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 50 விழுக்காடு மானியத்துடன் அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. இதுவரை 6724 சிறு, குறு விவசாயிகளுக்கு மானியமாக ரூ.3210.29 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**19. தமிழ்நாடு வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம்.**

2009-ஆம் ஆண்டில் "வன்னியர் பொதுச் சொத்து நல வாரியம்" வன்னியகுல சத்திரிய சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தின் பலன்கள் முழுவதும் உரியவர்களுக்குச் செல்வதற்கான வழிவகைகளைக் காண்பதற்காக அரசால் தோற்றுவிக்கப்பட்டது.

உயில் எழுதிய வன்னியகுல சத்திரிய சமுதாயத்தை சேர்ந்தவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகவும் வன்னிய பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகளின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும், அரசால் "தமிழ்நாடு வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டம், 2018" இயற்றப்பட்டு, 04.02.2019 அன்று நடைமுறைக்கு வந்தது.

இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் 1 தலைவர், பதவிவழி உறுப்பினர்கள் இருவர் உள்ளிட்ட 12 உறுப்பினர்கள் மற்றும் 1

உறுப்பினர் செயலாளர் அடங்கிய தமிழ்நாடு வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம் அரசால் உருவாக்கப்பட்டது. இவ்வாரியம் 12.04.2023 முதல் மூன்றாண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்திற்கு நிருவாகச் செலவினங்களை மேற்கொள்ள 2023-2024 ஆம் ஆண்டில் அரசு ரூ.1 கோடி ஒப்பளிப்பு செய்தது. இவ்வாரியம் அமைக்கப்பட்டதில் இருந்து இதுவரை மொத்தம் 22 வாரியக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

2023–2024 ஆம் ஆண்டில் புதிதாக 3 வன்னிய அறக்கட்டளைகள் கண்டறியப்பட்டு ஆக மொத்தம் 122 அறக்கட்டளைகள் இதுவரை கண்டறியப்பட்டுள்ளன. இந்த அறக்கட்டளைகள் 26 மாவட்டங்களில் அமைந்துள்ளன. இவ்வாறு கண்டறியப்பட்ட அறக்கட்டளைகளுள் இதுவரை மொத்தம் 74 அறக்கட்டளைகள் இவ்வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள அறக்கட்டளைகளை பதிவு செய்ய இவ்வாரியத்தால் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளைகளுள், இதுவரை 35 வன்னியகுல சத்திரிய பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகளின் சொத்துப் பட்டியல் தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளைகளின் சொத்துப் பட்டியலினை அரசிதழில் வெளியிட இவ்வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாரியத்திற்கு நிருவாகச் செலவினங்களை மேற்கொள்ள 2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறுபான்மையினர் நல இயக்ககம்**

தமிழகத்தில் உள்ள சிறுபான்மையின மக்களின் உரிமைகளைக் காப்பதற்காகவும், அவர்தம் கல்வி மற்றும் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் விதத்திலும் பல்வேறு நலத்திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது.

**20. பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கு தனி இட ஒதுக்கீடு**

சிறுபான்மையின சமுதாயத்தினரிடமிருந்து தனி இட ஒதுக்கீடு வழங்கக்கோரி பெறப்பட்ட பல்வேறு மனுக்களின் மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையினை பெற்று பரிசீலித்த அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை 2007 ஆம் ஆண்டு நிறைவேற்றியது. மேலும், அரசுப் பணிகளில் நேரடி நியமனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு முன்கொணர்வு முறையினை (Carry forward procedure) பின்பற்றிட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

21. **சிறுபான்மையினர் கல்வி உதவித் தொகை**

சிறுபான்மையின மாணவ, மாணவியர் கல்வியினை இடைவிடாது தொடர்ந்து பயிலும் வகையில் 9-ஆம் வகுப்பு முதல் தொழிற்கல்வி, ஆராய்ச்சிப் படிப்பு வரை அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் கிறித்தவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் சமண மதங்களைச் சார்ந்தவர்களுக்கு கீழ்க்காணும் கல்வி உதவித்தொகை திட்டங்கள் ஒன்றிய அரசின் 100% நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. **பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்**
2. **பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்**
3. **தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்**

இக்கல்வி உதவி திட்டங்களால் ஒன்பதாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி/ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியர் பயன் பெறுகின்றனர். இதற்கான நிதியை 100 விழுக்காடு ஒன்றிய அரசு வழங்குகிறது. மொத்த கல்வி உதவித்தொகையில், ஒவ்வொரு சிறுபான்மையின உட்பிரிவிலும் குறைந்தபட்சம் 30% மாணவிகளுக்கு ஒதுக்கப்படும்.

மாணவ / மாணவியர் (www.scholarships.gov.in) என்ற இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க வேண்டும். மேற்படி திட்டங்களின் கீழ் கல்வி உதவித் தொகை நேரடி பயன்மாற்று முறையில் (DBT- Direct Benefit Transfer) மூலம் ஒன்றிய அரசால் மாணவ, மாணவியரின் வங்கி கணக்கில் நேரிடையாக செலுத்தப்படுகிறது.

கல்வி உதவித் தொகைகளின் விவரம் பின்வருமாறு

| கல்வி உதவித் தொகை விவரம் | பயிலும் வகுப்புகள் | பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு | கல்வி உதவித் தொகை பெறுவதற்கான தகுதி |
|---|---|---|---|
| பள்ளிப்படிப்பு | 9 முதல் 10 ஆம் வகுப்பு வரை | ரூ. 1 இலட்சம் | முந்தைய ஆண்டின் இறுதி தேர்வில் 50 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். |
| பள்ளி மேற்படிப்பு | 11 முதல் ஆராய்ச்சி படிப்பு வரை | ரூ. 2 இலட்சம் | |
| தகுதி (ம) வருவாய் அடிப்படையில் | தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி | ரூ. 2.5 இலட்சம் | |

**i. பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை**

பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டம் ஒன்றிய அரசால் 2008-2009 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, 2021-2022 ஆம் ஆண்டு வரை ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு செயல்படுத்தப்பட்டு வந்தது. ஒன்றிய அரசு, கல்வி உரிமைச் சட்டம் 2009-ன்படி தொடக்கக்கல்வி (1 முதல் 8 ஆம் வகுப்பு வரை) அனைத்து குழந்தைகளுக்கும் அரசாங்கம் இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிப்பதை கட்டாயமாக்கியுள்ளது என்று தெரிவித்து 2022-2023 ஆம் ஆண்டு முதல் 1 முதல் 8 ஆம் வகுப்பு பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதை நிறுத்தி, 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு மட்டுமே கல்வி உதவித் தொகை வழங்குகிறது.

பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு.

(ரூ. இலட்சத்தில்)

| ஆண்டு | மாணவ/மாணவியர் எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|
| 2019-20 | 376418 | 7822.96 |
| 2020-21 | 381333 | 7645.72 |
| 2021-22 | 449559 | 8678.00 |
| 2022-23* | 46482 | 1272.69 |
| 2023-24** | - | - |

*இத்திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்ட மாணவ/ மாணவியர் விண்ணப்பங்களில், இதுவரை 46,482 மாணவ/ மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ. 1272.69 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**2023-2024 ஆம் ஆண்டிற்கான பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகைக்கான விண்ணப்பம் பெறும் பணி ஒன்றிய அரசால் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

### ii. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை

(ரூ. இலட்சத்தில்)

| ஆண்டு | மாணவ,/மாணவியர் எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|
| 2019-20 | 43233 | 2592.25 |
| 2020-21 | 44294 | 2477.32 |
| 2021-22 | 52432 | 2920.00 |
| 2022-23* | 13530 | 792.93 |
| 2023-24** | - | - |

*இத்திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்ட மாணவ / மாணவியர் விண்ணப்பங்களில், இதுவரை 13,530 மாணவ/ மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.792.93 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**2023-24 ஆம் ஆண்டிற்கான பள்ளி மேற்ப்படிப்பு கல்வி உதவித் தொகைக்கான விண்ணப்பம் பெறும் பணி ஒன்றிய அரசால் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

### iii. தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை

(ரூ. இலட்சத்தில்)

| ஆண்டு | மாணவ/மாணவியர் எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்யப்பட்டதொகை |
|---|---|---|
| 2019-20 | 5675 | 1469.21 |
| 2020-21 | 5279 | 1342.39 |
| 2021-22 | 6862 | 1757.00 |
| 2022-23* | 3319 | 858.48 |
| 2023-24** | - | - |

*இத்திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்ட மாணவ / மாணவியர் விண்ணப்பங்களில், இதுவரை 3,319 மாணவ / மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ. 858.48 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**2023-24 ஆம் ஆண்டிற்கான தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைக்கான விண்ணப்பம் பெறும் பணி ஒன்றிய அரசால் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

## 22. சிறுபான்மையினர் விடுதிகள்

சிறுபான்மையின மாணவ / மாணவியர் தங்களது கல்வியினை எவ்வித இடையூறுமின்றி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக எவ்வித கட்டணமுமின்றி உணவு மற்றும் உறைவிட வசதிகளுடன் இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் மொத்தம் 17 சிறுபான்மையினர் விடுதிகள் இயங்கி வருகின்றன.

விடுதிகளின் ஒப்பளிக்கப்பட்ட மற்றும் அனுமதிக்கப்பட்ட மாணவ/ மாணவியரின் விவரம்

| விடுதிகள் | விடுதிகளின் எண்ணிக்கை | | | ஒப்பளிக்கப்பட்ட மாணவ/ மாணவியர் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட மாணவ/ மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | மாணவ | மாணவியர் | மொத்தம் | | |
| பள்ளி விடுதிகள் | 0 | 4 | 4 | 350 | 224 |
| பள்ளி / கல்லூரி விடுதிகள் | 0 | 5 | 5 | 250 | 241 |
| கல்லூரி விடுதிகள் | 1 | 7 | 8 | 800 | 708 |
| மொத்தம் | 1 | 16 | 17 | 1400 | 1173 |

மொத்தமுள்ள 17 விடுதிகளில் 1 விடுதி, கல்லூரி மாணவர் விடுதி (ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம்) ஆகும். 16 விடுதிகள் மாணவியர் விடுதிகள் ஆகும். விடுதி மாணவ, மாணவியர் உணவுக்கான கட்டணம் உட்பட எவ்வித கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. மாணவ, மாணவியருக்கான விடுதி செலவினம் முழுவதையும் அரசே ஏற்கிறது.

இவ்விடுதிகளில் சேருவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.1.00 இலட்சத்திலிருந்து ரூ.2.00 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், 2024-2025 ஆம் நிதியாண்டில் சென்னை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டத்தில் இரண்டு சிறுபான்மையினர் மாணவர் விடுதி துவங்க நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், முகாம் வாழ் இலங்கை தமிழர்களின் குழந்தைகளுக்காக ஒவ்வொரு விடுதியிலும் 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விடுதியிலும் 4 சதவீத இடங்கள் மாற்றுத்திறனாளி மாணவ மாணவியருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன மேலும், மீட்கப்படும் குழந்தை தொழிலாளர்கள் விடுதிகளில் கல்வி ஆண்டின் இடையிலும் எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக் கொள்ளவும், படிப்பு முடியும் வரை தங்கி பயிலவும் அனுமதிக்கப்படுவர்.

தமிழ்நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டு கேரளா எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை, தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதி மொழி ஏற்கப்படுகிறது.

**22.1 உணவுக் கட்டணம்**

பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு உணவுக் கட்டணம் மாதமொன்றுக்கு ரூ.1000-லிருந்து ரூ.1,400 ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.1100-லிருந்து ரூ.1,500 ஆகவும் 23.01.2024 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. ஓர் ஆண்டில் 10 மாதங்களுக்கு உணவுக்கட்டணம் வழங்கப்படுகிறது.

பண்டிகை நாட்களில் (புத்த பூர்ணிமா, மஹாவீர் ஜெயந்தி, பக்ரீத், ரம்ஜான் மற்றும் கிறிஸ்துமஸ்) விடுதி மாணவ, மாணவியருக்கு சிறப்பு உணவுக் கட்டணமாக ஒரு பண்டிகைக்கு பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.40/-ம், கல்லூரி விடுதி மாணவ,மாணவியருக்கு சிறப்பு உணவு கட்டணம் ரூ.80/-ம் அனுமதிக்கப்பட்டுள்ளன.

சோப்பு மற்றும் பற்பசை போன்றவற்றிற்காக மாதாந்திர பல்வகை செலவினம் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.100/- ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.150/- ஆகவும் 10 மாதங்களுக்கு மின்னணு பரிமாற்றம் மூலம் நேரடியாக மாணவ, மாணவியரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டில் மேற்கண்ட விடுதிகளின் உணவுக் கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற பணிகளுக்காக ரூ.451.64 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது

**விடுதிகளின் நிர்வாகத்திற்கென ஆண்டுவாரியான ஒதுக்கீடு மற்றும் செலவிடப்பட்ட தொகை விவரங்கள் பின்வருமாறு.**

(ரூ. இலட்சத்தில்)

| ஆண்டு | ஒதுக்கீடு | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|
| 2019-20 | 351.74 | 322.54 |
| 2020-21 | 404.42 | 189.69 |
| 2021-22 | 402.89 | 270.22 |
| 2022-23 | 459.46 | 409.40 |
| 2023-24 | 506.76 | 451.64 |

### 22.2 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

இத்துறையின் கீழ் இயங்கி வரும் 17 சிறுபான்மையினர் விடுதிகளில் 11 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 6 விடுதிகளுக்கு மாணவ, மாணவியரின் எண்ணிக்கையின் அடிப்படையில் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

22.3 **விடுதி கட்டடங்கள் பராமரிப்புப் பணிகள்**

சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள் பொதுப்பணித்துறையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. 2023-2024 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகளுக்காக ரூ. 1.00 கோடி செலவில் 9 விடுதிகளில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டன.

**(ரூ. இலட்சத்தில்)**

| **வ.எண்** | **விடுதிகளின் பெயர்** | **மொத்தம்** |
|---|---|---|
| 1 | கல்லூரி மாணவியர் விடுதி, மேல்விஷாரம், இராணிப்பேட்டை மாவட்டம் | 10.50 |
| 2 | பள்ளி மாணவியர் விடுதி, கடையநல்லூர், தென்காசி மாவட்டம் | 3.00 |
| 3 | பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதி, பேகம்பூர்,திண்டுக்கல் மாவட்டம் | 3.50 |
| 4 | பள்ளி மாணவியர் விடுதி, தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம் | 12.00 |
| 5 | பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதி, வைகுண்ட கோசபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் | 14.00 |
| 6 | கல்லூரி மாணவியர் விடுதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் | 10.00 |
| 7 | கல்லூரி மாணவியர் விடுதி, பால்குளம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் | 28.00 |
| 8 | பள்ளி மாணவியர் விடுதி, கீழவாசல், மதுரை மாவட்டம் | 13.00 |
| 9 | பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதி, மசக்காளிபாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் | 6.00 |
| மொத்தம் | | 100.00 |

**23. முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்**

இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற கணவரால் கைவிடப்பட்ட / விதவை மற்றும் வயதான பெண்களுக்கு உதவிடும் வகையில் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரை பதவி வழி தலைவராக கொண்டு மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் 2007 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டு இச்சங்கங்கள் சங்கங்களின் பதிவு சட்டத்தின்

கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கு ஏற்ப அரசின் இணை மானியம் இரு மடங்காக உயர்த்தப்பட்டு 1:2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது. தேவையின் அடிப்படையில் கூடுதலாக தேனி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில் தலா ஒரு முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் கூடுதலாக துவங்கப்பட்டு தற்போது 43 முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றது.

கடந்த 5 ஆண்டுகளில் மேற்படி சங்கத்திற்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட இணை மானியத் தொகை விவரம்.

(ரூ. இலட்சத்தில்)

| ஆண்டு | இணை மானியத் தொகை |
|---|---|
| 2019-20 | 67.83 |
| 2020-21 | 586.16 |
| 2021-22 | 436.11 |
| 2022-23 | 249.13 |
| 2023-24 | 658.98 |

இத்திட்டத்தின் கீழ் 2023-24 ஆம் ஆண்டில் 9517 பயனாளிகளுக்கு ரூ. 959.03 இலட்சத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

**24. கிறித்துவ மகளிர் உதவும் சங்கம்**

கிறித்துவ மதத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற கணவரால் கைவிடப்பட்ட / விதவை மற்றும் வயதான பெண்களுக்கு உதவிடும் வகையில் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரை பதவி வழி தலைவராக கொண்டு மாவட்ட கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் 2018 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நண்கொடை மூலம் திரட்டும் நிதி

ஆதாரத்திற்கு ஏற்ப அரசின் இணை மானியம் இரு மடங்காக 1:2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது. கரூர், மதுரை மற்றும் தேனி ஆகிய 3 மாவட்டங்களில் தலா ஒரு கிறித்துவ மகளிர் உதவி சங்கங்கள் கூடுதலாக துவக்கப்பட்டு தற்போது 41 கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றது.

கடந்த 4 ஆண்டுகளில் அரசால் ஒப்பளிக்கப்பட்ட இணை மானியத் தொகை வழங்கப்பட்ட விவரம்.

(ரூ. இலட்சத்தில்)

| ஆண்டு | இணை மானியம் விடுவிக்கப்பட்ட தொகை |
|---|---|
| 2020-21 | 330.00 |
| 2021-22 | 247.49 |
| 2022-23 | 162.57 |
| 2023-24 | 394.80 |

இத்திட்டத்தின் கீழ் 2023-24 ஆம் ஆண்டில் **3345** பயனாளிகளுக்கு ரூ. 432.68 இலட்சத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

**25. உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியம்**

தமிழ்நாட்டில் உள்ள இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள், தர்காக்கள், அடக்கஸ்தலங்கள், தைக்காக்கள், ஆஷுர்கானாக்கள், முஸ்லிம் அனாதை இல்லங்கள் மற்றும் மதரஸாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள் / ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் உள்ளிட்ட பணியாளர்களின் பொருளாதாரம் மற்றும் கல்வி நிலைகளின் மேம்பாட்டிற்காக உலமாக்கள் மற்றும் இதரப் பணியாளர்கள் நலவாரியம் 2009-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்தும் 60 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். பதிவு பெற்ற உறுப்பினருக்கு ஓர் அடையாள அட்டை கட்டணமின்றி

இவ்வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது. அடையாள அட்டை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும்.

2023-2024 ஆம் ஆண்டில் 544 புதிய உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு, இவ்வாரியத்தில் இதுவரை மொத்தம் 14,696 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் 2023-24 ஆம் ஆண்டில் 395 பயனாளிகளுக்கு ரூ. 50.44 இலட்சத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இவ்வாரியத்தில் 31.03.2024 வரை நலத்திட்டம் வாரியாக வழங்கப்பட்ட நிதியுதவி விவரம் பின்வருமாறு:

| திட்டம் | பயனாளிகள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| கல்வி உதவித்தொகை | 1651 | 2460750 |
| திருமணம் | 370 | 738750 |
| மகப்பேறு | 306 | 1825000 |
| கருச்சிதைவு /கருக்கலைப்பு | 21 | 70000 |
| விபத்தினால் ஏற்படும் மரணம் / ஈமச்சடங்கு | 10 | 775000 |
| இயற்கை மரணம் | 191 | 2975000 |
| இறுதிச்சடங்கு | 197 | 598000 |
| கண் கண்ணாடி | 1230 | 615000 |
| முதியோர் ஓய்வூதியம் | 1051 | 14562450 |
| **மொத்தம்** | **5027** | **24619950** |

### 25.1 பதிவு பெற்ற வஃக்பு நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம்:

வஃக்பு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட வஃக்பு நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு புதிய இருசக்கர வாகனம் வாங்க வாகனத்தின் விலையில் 50 விழுக்காடு அல்லது ரூ.25000 இதில் எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கிட உத்திரவிடப்பட்டுள்ளது இத்திட்டத்திற்காக ரூ.703.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை

இத்திட்டத்தின் கீழ் 98 உலாமாக்களுக்கு ரூ.24.50 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**26. கிராமப்புற சிறுபான்மை மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல்**

கிராமப்புற பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிப்பதற்காகவும், தொடக்கக் கல்வி அளவில் சிறுபான்மைப் பெண் குழந்தைகளின் இடைநிற்றலைக் குறைக்கவும், சிறுபான்மையின பெண் குழந்தைகளுக்கான கிராமப்புற பெண் ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் 2022-2023 ஆம் ஆண்டில் புதிதாக துவங்கப்பட்டது. கிராமப்புறங்களில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக அரசு உதவி பெறும் பள்ளிகளில் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் பயிலும் பெற்றோர்/ பாதுகாவலரின் ஆண்டு வருமானம் 1,00,000/-க்குள் உள்ள மாணவிகளுக்கு ரூ.500/- மற்றும் 6 ஆம் வகுப்பு பயிலும் மாணவியர்களுக்கு ரூ.1000 /- ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 மற்றும் 2023-2024 ஆகிய ஆண்டுகளுக்கு ரூ.482.64 இலட்சம் செலவில் 76,663 மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**27. சிறுபான்மையினருக்கு தையல் இயந்திரங்கள் வழங்குதல்**

2023-24 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் பின்தங்கிய சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்தவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக 2500 மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் ரூ.140.68 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

**28. கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்**

தமிழ்நாட்டில் உள்ள கிறித்துவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள், வேதியர்கள், உதவியாளர்கள், பாடகர்கள், கல்லறை பணியாளர்கள், கிறித்துவ அனாதை இல்லங்கள் மற்றும் தொழுநோயாளியர் மறுவாழ்வு இல்லங்கள் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக கிறித்துவ தேவாலயங்களில் பணிபரியும் உபதேசியார்கள்

மற்றும் பணியாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டு 2022-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாரியத்தில், உறுப்பினராக பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்தும் 60 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். பதிவு பெற்ற உறுப்பினருக்கு ஓர் அடையாள அட்டை கட்டணமின்றி இவ்வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது. அடையாள அட்டை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும். 2023-24 ஆம் ஆண்டில் 140 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டிற்கு நலத்திட்ட உதவிகள் வழங்க ரூ.75 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### 29. ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கான நிதியுதவி

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனிதப்பயணம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டொன்றுக்கு இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளின் எண்ணிக்கை 600 ஆகும். இதில் 50 இடங்கள் கன்னியாஸ்திரிகள்/ அருட்சகோதரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கன்னியாஸ்திரிகள்/ அருட்சகோதரிகளுக்கு ரூ.60,000/-மும் மற்ற நபர்களுக்கு ரூ.37,000/-மும் நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் ரூ.825.60 இலட்சம் செலவில் 4128 கிறித்துவர்கள் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

மேலும், இத்திட்டத்தினை ஏற்கனவே உள்ள நடைமுறைகளுடன் ECS முறையில் பயனாளிகளுக்கு நேரடியாக மானியம் வழங்கும் திட்டமாக வழிகாட்டி நெறிமுறைகளை மாற்றி அமைத்து உத்தரவிடப்பட்டுள்ளது.

### 30. கிறித்துவ தேவாலயங்கள் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம்

கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கு மானிய உதவி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கென இதுவரை ரூ.700.00 இலட்சம் ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 34 கிறித்துவ தேவாலயங்களுக்கு புனரமைப்புப் பணிகளுக்காக ரூ.101.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில், கிறித்துவ தேவாலயங்களை புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்காக ரூ.24.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

**(ரூ.இலட்சத்தில்)**

| **வ. எண்** | **மாவட்டம்** | **தேவாலயம் பெயர்** | **ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை** |
|---|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் | புனித பேதுரு தேவாலயம் | 6.00 |
| 2. | திருவண்ணாமலை | புனித பிரான்சிஸ் சேவியர் தேவாலயம் | 6.00 |
| 3. | ஈரோடு | அசெம்பளி ஆப் காட் தேவாலயம் | 6.00 |
| 4. | திருப்பூர் | புனித தோமையார் தேவாலயம் | 6.00 |
| **மொத்தம்** | | | **24.00** |

இத்திட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் நிதியுதவி வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு:

(ரூ. இலட்சத்தில்)

| **ஆண்டு** | **தேவாலயங்களின் எண்ணிக்கை** | **ஒப்பளிக்கப்பட்ட தொகை** |
|---|---|---|
| 2019-20 | 2 | 5.00 |
| 2020-21 | 5 | 14.78 |
| 2021-22 | 2 | 6.00 |
| 2022-23 | 5 | 12.50 |
| 2023-24 | 4 | 24.00 |

தொன்மையான தேவாலயங்கள் புனரமைத்தல் திட்டத்தின் கீழ் 2023-24 ஆம் ஆண்டில் சென்னையில் உள்ள வெஸ்லி தேவாலயம், திருநெல்வேலியில் உள்ள கால்டுவெல் நினைவகம், செங்கல்பட்டிலுள்ள புனித தோமையார் மலை தேவாலயம், கன்னியாகுமரியிலுள்ள புனித

சவேரியர் தேவாலயம் ஆகிய நான்கு தேவாலயங்களுக்கு ரூ.6.00 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு மதுரை புனித ஜார்ஜ் தேவாலயம் புனரமைப்பதற்காக இத்திட்டத்தின் கீழ் ரூ.2.00 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**31. கபர்ஸ்தான் மற்றும் கல்லறைத்தோட்டம் அமைத்தல்**

கிறித்தவர்களுக்கான கல்லறைத் தோட்டங்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்கள் இல்லாத மாவட்டத் தலைநகரங்களில், தேவைப்படும் நிலத்தை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் கையகப்படுத்தி, மாநகராட்சி / நகராட்சி சார்பில் கல்லறைத் தோட்டங்கள் மற்றும் கபர்ஸ்தான்கள் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**31.1 கல்லறைத் தோட்டம் மற்றும் கபரஸ்தான்களுக்கு புதிதாக சுற்றுச்சுவர், பாதை அமைத்தல் மற்றும் புனரமைத்தல்.**

கிறித்தவர் மற்றும் இஸ்லாமிய சமுதாயத்தினர் இறந்த உடலை அடக்கம் செய்யும் இடமான கல்லறைத்தோட்டம் மற்றும் கபரஸ்தானங்களில் உள்ள பழுதடைந்த சுற்றுச் சுவர்களை சீரமைத்தல், புதிதாக சுற்றுச்சுவர், பாதை அமைத்தல் மற்றும் பாதைகளை புனரமைத்தல் திட்டத்தினை செயல்படுத்த ரூ.1 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் படி புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கீழ்காணும் விவரப்படி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

(ரூ. இலட்சத்தில்)

| மாவட்டம் | பணியின் பெயர் | ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை |
|---|---|---|
| புதுக்கோட்டை | கலியராயன் விடுதி ஊராட்சி, நெல்லியடி கொல்லை, இஸ்லாமியர் அடக்கஸ்தலத்திற்கு (கபர்ஸ்தான்) ஈரடுக்கு மெட்டல், தார்சாலை மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் | 34.74 |
| | கி.முதலிப்பட்டி ஊராட்சி, கிளாங்காடு கிராமத்தில் உள்ள முகையதீன் ஆண்டவர் இஸ்லாமியர் அடக்கஸ்தலத்திற்கு (கபர்ஸ்தான்) ஓரடுக்கு மெட்டல், தார்சாலை மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் | 32.82 |
| | **மொத்தம்** | **67.56** |

**32. சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கான சிறுபான்மையினர் அந்தஸ்து**

கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து வழங்கும் பொருண்மை இத்துறையின் மூலம் செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. இணையவழி மூலம் இத்திட்டத்தினை செயல்படுத்த தனி இணையதளம் உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. சிறுபான்மையினர் அந்தஸ்து கோரும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு சிறுபான்மையினர் நல இயக்குநரகம் முனையக துறையாகும் (Nodal Department). 2023-24 ஆம் ஆண்டில் மொத்தம் 44 கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மை அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் மொழிவாரி சிறுபான்மை அந்தஸ்து சான்றிதழ்கள் 26 கல்வி நிறுவனங்களுக்கும் மதச்சார்பு சிறுபான்மை அந்தஸ்து சான்றிதழ்கள் 18 கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**33. பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்**

சிறுபான்மையின மக்களின் கல்வி வாய்ப்பினை அதிகரிக்கவும், பொருளாதார மற்றும் வேலைவாய்ப்புகளில் சம பங்கினை உறுதி செய்யவும், சிறுபான்மையினர் வாழ்வு நிலையை மேம்படுத்தவும், இனக்கலவரம் மற்றும் வன்முறைகளை தடுத்தல் கட்டுப்படுத்துதல் போன்ற சீரிய குறிக்கோளுக்காகவும் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்சத்திட்டம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் முறையாக செயலாக்கப்படுவதைக் கண்காணிக்க மாநில அளவில் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பாரதப்பிரதமரின் புதிய 15 அம்சத்திட்டத்தின் கீழான திட்டவாரியான முன்னேற்ற அறிக்கைகள் பின்வருமாறு.

**I. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் சேவைகளை சீராக கிடைக்கச் செய்தல் (சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை)**

தமிழ் நாட்டில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் மொத்தம் 54,449 அங்கன்வாடி மையங்கள் (49,509 அங்கன்வாடி மையங்கள் மற்றும் 4,940 குறு அங்கன்வாடி மையங்கள்) இயங்கி வருகின்றன. இதன் மூலம் மொத்தம் 28,70,150 குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர். இவற்றில் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த 2,33,811 குழந்தைகள் அடங்குவர். 2023-24 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.1,30,346.33 இலட்சம் மொத்த செலவினத்தில் சிறுபான்மையினருக்கென ரூ.9,209.81 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**II. பள்ளிக்கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பை அதிகரித்தல் (பள்ளிக் கல்வித்துறை)**

தமிழகத்தில் கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் பள்ளிகளில் எவ்வித தடையுமின்றி சிறுபான்மையின மாணவ/மாணவியர் சேர்க்கப்படுகின்றனர். மேலும் மதவாரியான மற்றும் மொழிவாரியான சிறுபான்மையின குழந்தைகள் அதிகம் வசிக்கும் பகுதியில் போதுமான எண்ணிக்கையில் பள்ளிகள் உள்ளன.

அனைவருக்கும் கல்வித் திட்டம் (SSA) மற்றும் கஸ்துரிபாய் காந்தி பாலிகா வித்யாலயா பள்ளி (KGBVS) திட்டங்களின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சாதனை விவரம் பின்வருமாறு.

(ரூ.இலட்சத்தில்)

| திட்டத்தின் பெயர் | நிதி ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|
| SSA KGBV | 5335.69 | 4005.10 |

**III. உருதுமொழியைக் கற்பிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் (பள்ளிக் கல்வித் துறை)**

பள்ளி கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் மாநிலத்தில் உருது மொழியை முதல் பாடமாகக் கொண்டு தொடக்க /இடைநிலை/ உயர்நிலை/மேல்நிலை பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில்

உருதுமொழி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு மாணவ, மாணவியர் உருதுமொழியை முதல் பாடமாகக் கொண்டு பயின்று வருகின்றனர்.

**IV. மதரஸா கல்வி முறையை நவீனப்படுத்துதல் (பள்ளிக்கல்வித்துறை)**

மதரஸா கல்வி முறையை நவீனமயமாக்கும் திட்டமானது, சிறுபான்மை நிறுவனங்கள் / பள்ளிகளின் உட்கட்டமைப்பு மேம்பாடு திட்டம் என ஒரு தனித் திட்டமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின்படி, சிறுபான்மை நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கருத்துருக்கள் பள்ளிக் கல்வித் துறை செயலாளர் அவர்களின் தலைமையிலான மாநில அளவிலான மானியக்குழுவில் வைக்கப்பட்டு, அவை குழுவின் மூலம் பரிசீலிக்கப்பட்டு முன்னுரிமையின் அடிப்படையில் நிதி ஒப்புதலுக்காக மத்திய அரசிற்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

**V. சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்த கல்வியில் சிறந்த மாணவ /மாணவியருக்கு உதவித்தொகை வழங்குதல்.**

அரசு/அரசு உதவி பெறும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கல்வி நிலையங்களில் 9-ஆம் வகுப்பு முதல் தொழிற் கல்வி/ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின வகுப்பைச் சார்ந்த மாணவ/மாணவியருக்கு ஒன்றிய அரசு மூன்று வகையாக கல்வி உதவித்தொகைத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**V(i). பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை**

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்ட மாணவ/ மாணவியர் விண்ணப்பங்களில், இதுவரை 46,482 மாணவ/ மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.1272.69 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டிற்கான பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகைக்கான விண்ணப்பம் பெறும் பணி ஒன்றிய அரசால் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

**V (ii). பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை**

இத்திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்ட மாணவ/ மாணவியர் விண்ணப்பங்களில், இதுவரை 13,530 மாணவ/ மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.792.93 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023-24 ஆம் ஆண்டிற்கான பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகைக்கான விண்ணப்பம் பெறும் பணி ஒன்றிய அரசால் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

**V(iii) தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை**

இத்திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்ட மாணவ/ மாணவியர் விண்ணப்பங்களில், இதுவரை 3,319 மாணவ/ மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.858.48 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023-24 ஆம் ஆண்டிற்கான பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகைக்கான விண்ணப்பம் பெறும் பணி ஒன்றிய அரசால் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

**VI. மௌலானா ஆசாத் கல்வி அறக்கட்டளை மூலம் கல்வி உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் (கல்வித் துறை)**

**பேகம் ஹஸ்ரத் மஹால் கல்வி உதவித்தொகை**

சிறுபான்மையின சமூகத்தை சார்ந்த கல்வியில் சிறந்து விளங்கும் மாணவிகளை அங்கீகரித்து அவர்கள் பள்ளி படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பினை தொடர்ந்து பயில ஊக்கம் அளிக்கும் வகையில் 'பேகம் ஹஸ்ரத் மஹால் தேசிய கல்வி உதவித்தொகை திட்டம் 2003 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு சிறுபான்மையின விவகார அமைச்சகத்தின் மௌலானா ஆசாத் கல்வி அறக்கட்டளை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுபான்மையினருக்கான பிற கல்வி உதவித் தொகை திட்டங்களுடன் இணைந்து விரைவாக செயல்படுத்தும் நோக்கில் இத்திட்டம் 2021-2022 ஆம் ஆண்டு முதல் தேசிய கல்வி உதவித் தொகை

இணையத்தில் (National Scholarship Portal) இணைக்கப்பட்டு ஒன்றிய அரசின் 100% நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் Bio-authentication முடிக்கப்பட்ட 11,552 விண்ணப்பங்கள் மாணவியரிடமிருந்து பெறப்பட்டு ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**VII. சுய வேலைவாய்ப்பு மற்றும் எளியவர்களுக்கான கூலியுடன் வேலைத்திட்டம்**

**அ. தீன் தயாள் அந்தியோதய யோஜனா - தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் (DAY – NRLM)**

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)**

ஊரக ஏழை மக்களுக்காக வலுவான மற்றும் துடிப்பான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற வழிவகை செய்து, குடும்ப வருமானத்தை பெருக்குவதே தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டம் சமுதாயத்தில் உள்ள ஏழைகள் மற்றும் நலிவுற்ற பிரிவினர்களை இலக்காக கொண்டுள்ளது. இலக்கு மக்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதற்காக அவர்களைக் கொண்டு செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள் அமைக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் செயல்பாடுகளுக்கான நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

**ஆ. திறன் மேம்பாடு மற்றும் பணியமர்வு திட்டம்**

**i. வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி**

திறன் பயிற்சித் திட்டமானது 2012-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வந்து பின்னர் தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்யா யோஜனா என பெயர் மாற்றப்பட்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

மாநிலத்தில் கீழ்க்கண்ட முக்கிய பிரிவுகளில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆட்டோ மொபைல், சுகாதாரம், தோல் மற்றும் தோல் பொருட்கள், தகவல் தொழில்நுட்பம், சில்லறை வர்த்தகம், ஆயத்த ஆடைகள், வங்கி நிதி சேவை மற்றும் காப்பீடு மற்றும் அழகு கலை, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், மின் மற்றும் மின்னணு, கட்டுமானம், விவசாய பண்ணை உபகரணங்கள் பராமரிப்பு, வெல்டிங், தொழிற்சாலைகளின் உற்பத்தி சம்பந்தமானவை, தளவாடங்கள் மற்றும் விநியோகத் தொடர் மேலாண்மை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலியவை.

2023 - 2024 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கான மொத்தம் 20,000 பயனாளிகளுக்கு 1,907 சிறுபான்மையினர்களுக்கு ரூ.117.12 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது.

**இ. தீன் தயாள் அந்தியோதய யோஜனா - தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY – NULM)**

தீன் தயாள் அந்தியோதய யோஜனா-தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கமானது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதாச்சாரஅடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது நகர்ப்புறங்களில் பின்தங்கிய மற்றும் ஏழைக் குடும்பங்களுக்கு வலுவான நிறுவன அமைப்புகளை உருவாக்கித்தருவதன் மூலம் அவர்களின் நிலையான வாழ்வாதாரத்தை கீழ்மட்ட நிலையிலிருந்து இலாபம் தரக்கூடிய வகையில் சுய வேலை மற்றும் திறன் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி அவற்றின் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உறுதி செய்தல்.

2023-24 ஆம் ஆண்டிற்கான திட்டவாரியான சாதனைகள் விவரம் பின்வருமாறு.

| ஆண்டு | திட்டம் | பட்ஜெட் ஒதுக்கீடு | | சிறுபான்மையினர் இலக்கில் சாதனை | | ஒதுக்கப்பட்ட பட்ஜெட்டில் 15 சதவீதம் சிறுபான்மையினருக்கு அனுப்பப்பட்டுள்ளதா |
|---|---|---|---|---|---|---|
| | | பயனாளிகள் | செலவினம் (ரூ.கோடி) | பயனாளிகள் | செலவினம் (ரூ.கோடி) | |
| 2023-24 | DAY-NULM | 5400 | 25.28 | 4973 | 28.93 | ஆம் |

## VIII. தொழில் நுட்பப் பயிற்சியின் மூலம் திறனை மேம்படுத்துதல்: (தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை)

இத்திட்டத்தின் கீழ் சிறுபான்மையினருக்கு தங்கள் திறனை வளர்த்து அதன் மூலம் வேலை வாய்ப்பு பெற பயிற்சி அளிக்கப்படுகிறது. சிறுபான்மையினர் அதிகம் இருக்கும் இடத்தில் புதிய தொழிற் பயிற்சி நிலையங்களை துவக்கியும் ஏற்கனவே உள்ள பயிற்சி நிலையங்களின் தரம் உயர்த்தவும் படுகிறது.

தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை கீழ் 402 தொழிற்பயிற்சி நிலையங்கள் ( 102 அரசு மற்றும் 300 தனியார்) இயங்கி வருகின்றன. இவற்றில் 2023-24 ஆம் ஆண்டில் பயின்ற 44,202 மாணவ / மாணவியர்களுள் 4,079 மாணவ, மாணவியர் சிறுபான்மையினர் ஆவார்.

## IX. (அ) பொருளாதார நடவடிக்கைகளுக்கான கடன் உதவியை அதிகரிக்கச் செய்தல்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் சிறுபான்மையின மக்களுக்கு குறைந்த வட்டியில் பொருளாதார கடனுதவிகள் வழங்கப்படுகின்றன.

2023-2024 ஆம் ஆண்டில் மொத்தம் 10,203 பயனாளிகளுக்கு ரூ.6,858.21 இலட்சம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

### (ஆ) சிறுபான்மையினருக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்குதல்

பொதுத்துறை வங்கிகள் மூலம் வழங்கும் கடன்களில் 15% சிறுபான்மையினருக்கு வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31.03.2024 வரை 22,06,151 சிறுபான்மையினருக்கு ரூ.45,343.64 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

## X. மாநில மற்றும் மத்திய அரசுப்பணிகளில் வேலைவாய்ப்பு

பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கென அரசு பணிகளில் வேலை வாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் சேர்க்கைக்காக 3.5 விழுக்காடு தனி இடஒதுக்கீடு திருத்திய இனச்சுழற்சியின்படி வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**XI. ஊரக வீட்டு வசதி திட்டத்தில் சம அளவு பங்கு (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை)**

PMAY-G இன் கீழ் வீடுகள் அனுமதிக்கப்படுவது 2021-2022 ஆம் ஆண்டிலேயே நிறைவடைந்துள்ளதால் 2023-2024 ஆம் ஆண்டில் வீடுகளுக்கு அனுமதி இல்லாததால் சிறுபான்மையினர் விஷயத்தில் PMAY-G இன் வெற்றறிக்கை அனுப்பப்பட்டது. இருப்பினும், 2016-2017 முதல் 2019-2020 மற்றும் 2021-2022 வரை 7,48,006 வீடுகளில், 16,864 வீடுகள் சிறுபான்மையினருக்கு PMAY-G இன் கீழ் அனுமதிக்கப்பட்டன.

**XII. சிறுபான்மையினத்தவர் வாழும் நகர்புற பகுதிகளின் நிலையை மேம்படுத்துதல் (வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை)**

ஒன்றிய அரசின் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டிற்கு மொத்தம் 46,724 வீடுகள் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு சிறுபான்மையினருக்கு 8,130 வீடுகள் சிறுபான்மையினர் பயனடையும் வகையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**XIII (ம) XIV. இனக்கலவரங்களைத் தடுத்தல் மற்றும் இனக்கலவரத்தினை தூண்டுவோருக்கு தண்டனை**

இனக்கலவரங்களைத் தடுத்தல் தொடர்பாக மைய அரசின் அறிவுரைப்படி காவல் துறை இயக்குநர் அலுவலகத்தில் தொடர்புப் பிரிவு (Nodal Cell) அமைக்கப்பட்டு, அதற்கு காவல் கண்காணிப்பாளர், சிறப்புப் பிரிவு, நுண்ணாய்வுத் துறை, சென்னை-4 அவர்கள் தொடர்பு அலுவலராக (Nodal Officer) நியமிக்கப்பட்டுள்ளார். இப்பிரிவு மாநிலத்தில் இனக்கலவரங்கள் நிகழாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தும் உரிய விவரங்களைச் சேகரித்தும் பராமரித்தும் வருகிறது.

**XV இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு**

சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்து இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்கள், சிறு குற்றங்களுக்காக தண்டனைப் பெற்று சிறையிலிருந்து வெளிவந்தவர்கள், உடல் மற்றும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோர் சமுதாயத்தில் கண்ணியத்துடன்

வாழ்வதற்காக சிறுவணிகம் மேற்கொள்ள மறுவாழ்வு நிதியுதவியாக தலா ரூ. 10 ஆயிரம் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை சிறு குற்றங்களுக்காக சிறைச் சென்று வெளிவந்த 14 பயனாளிகளுக்கு ரூ.1.40 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**34. பிரதம மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் (PMJVK)**

பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டுத் திட்டம் (பிரதம மந்திரியின் ஜன் விகாஸ் கார்யக்ரம்), சிறுபான்மையினர் அதிகம் வாழும் பகுதிகளில் உள்ள சிறுபான்மையினரின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதையும், அவர்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் வகையில் அடிப்படை வசதிகளை வழங்குவதையும், ஏற்றத் தாழ்வினை குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டதாகும். இத்திட்டத்தின் கீழ் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

ஒன்றிய அரசின் சிறுபான்மையின நல அமைச்சகத்தால், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகள் என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்துக்கான திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டமானது சிறுபான்மையினர் அதிகம் வாழும் (15 கிலோமீட்டர் சுற்றளவுக்குள்) (25% அதிகமாக) செறிவூட்டப்பட்ட பகுதிகளில் முன்மொழியப்படும்.

இத்திட்டம், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்ற நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் மொத்த நிதியில் 80 சதவீதம் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு திட்டங்களுக்கும், அவற்றில் 33-40 சதவீதம் பெண்கள் /

பெண்குழந்தைகளுக்கான கட்டமைப்புகள் / வசதிகள் ஏற்படுத்துவதற்காகவும் செலவிடப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் சமுதாய கூடம் அமைத்தல், உண்டு உறைவிடப்பள்ளி, திறன்மிகு வகுப்பறை (ஸ்மார்ட்கிளாஸ்), அரசு தொழிற்பயிற்சி நிலையம் / தொழில்நுட்ப கூடங்களில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல், சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல், அரசு பள்ளிகளுக்கு கட்டிடங்கள், பல்வகை தொழிற்நுட்ப கல்லூரிகள், வேலைக்கு செல்லும் பெண்களுக்கு விடுதிகள் அமைத்தல், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்கலைகழகங்களில் மாணவர் விடுதிகள் மற்றும் சிறப்பு வகுப்புகள் உருவாக்குதல், அரசு அங்கிகரித்துள்ள மதராசா பள்ளிகளுக்கு இணைய வசதியுடன் கூடிய கணினிகள் வழங்குதல் மற்றும் ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் குறிப்பிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை சிறுபான்மையினர் அதிகம் வாழும் இடங்களில் ஏற்படுத்தி தருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2019-20 & 2020-2021 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 11 மாவட்டங்களில் ரூ.4268.79 இலட்சம் மதிப்பிலான 61 திட்டங்களை செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டு, முதல் கட்ட தவணையாக ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் பங்களிப்பாக ரூ.2,134.39 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. 58 பணிகள் நிறைவுற்று, மீதமுள்ள 3 பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:-

(ரூ. இலட்சத்தில்)

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சிகள்/ நகர்ப்புறங்கள் | பணிகளின்விவரம் | பணிகளின் எண்ணிக்கை | மொத்த மதிப்பீடு | ஒன்றிய மற்றும் மாநில அரசால் விடுவிக்கப்பட்ட முதல் கட்ட தவணைத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ICDS centre in Poonga Nagar | 1 | 7.50 | 3.75 |
| 2. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ICDS Centre in Thulasi Garden | 1 | 7.50 | 3.75 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ICDS Centre in NP Ittery Street | 1 | 7.50 | 3.75 |
| 4. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ICDS centre in AndalThottam | 1 | 7.50 | 3.75 |
| 5. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ICDS Centre in Gandhi Nagar, Pillayarpuram. | 1 | 7.50 | 3.75 |
| 6. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ICDS centre in Kondies Colony. | 1 | 7.50 | 3.75 |
| 7. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ICDS Centre in M.G.R. Nagar | 1 | 7.50 | 3.75 |
| 8. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ICDSCentre in Chithannapuram | 1 | 7.50 | 3.75 |
| 9. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ICDS Centre in Mettur School. | 1 | 7.50 | 3.75 |
| 10. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ICDSCentre in Annapuram | 1 | 7.50 | 3.75 |
| 11. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ICDS Centre in EaswaranStreet | 1 | 7.50 | 3.75 |
| 12. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ICDS Centre in Ammanpudur | 1 | 7.50 | 3.75 |
| 13. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ICDS Centre & Toilet in Middle School Campus at Ganesapuram | 1 | 7.50 | 3.75 |
| 14. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ICDScentre in Visalakshi Nagar, Ramachettipalayam. | 1 | 7.50 | 3.75 |
| 15. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ICDS centre in School Street,Sundakkamuthur | 1 | 7.50 | 3.75 |
| 16. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of ToiletBlock in Corporation Middle School, Konavaikalpalayam | 1 | 20.00 | 10.00 |
| 17. | திண்டுக்கல் | திண்டுக்கல் (M. Corp) | Construction of ICDSCentres Karunanithi Nagar. | 1 | 7.50 | 3.75 |
| 18. | திண்டுக்கல் | திண்டுக்கல் (M. Corp) | Construction of ICDSCentres Kumaran Thirunagar | 1 | 7.50 | 3.75 |
| 19. | திண்டுக்கல் | திண்டுக்கல் (M. Corp) | Construction of ICDSCentres Arockiamatha Street, VMR Patti. | 1 | 7.50 | 3.75 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 20. | திண்டுக்கல் | திண்டுக்கல் (M. Corp) | Construction of ICDS Centres Arockiamatha Street, Bodinaicken Patti. | 1 | 7.50 | 3.75 |
| 21. | திண்டுக்கல் | திண்டுக்கல் (M. Corp) | Construction of ICDS Centres West Marianathapuram,New Street | 1 | 7.50 | 3.75 |
| 22. | திண்டுக்கல் | திண்டுக்கல் (M. Corp) | Construction of ICDSCentres Poochinaickenpatti | 1 | 7.50 | 3.75 |
| 23. | திண்டுக்கல் | திண்டுக்கல் (M. Corp) | Construction of ICDSCentres West Care street, kamarajapuram | 1 | 7.50 | 3.75 |
| 24. | திண்டுக்கல் | திண்டுக்கல் (M. Corp) | Construction of SubHealth Centre Old Maternity Centre, Mariyanathapuram. | 1 | 30.00 | 15.00 |
| 25. | திண்டுக்கல் | திண்டுக்கல் (M. Corp) | Construction of Sub Health Centre Santhairoad MCC Plant near. | 1 | 30.00 | 15.00 |
| 26. | திண்டுக்கல் | திண்டுக்கல் (M. Corp) | Construction of SubHealth Centre Muthalagupatti Old Maternity Home. | 1 | 30.00 | 15.00 |
| 27. | திண்டுக்கல் | திண்டுக்கல் (M. Corp) | Construction of Sub Health Centre MaduraiRoad Old Pump Road (Madurai Road Pettai Road Junction) | 1 | 30.00 | 15.00 |
| 28. | திண்டுக்கல் | திண்டுக்கல் (M. Corp) | Construction of Sub Health Centre Baska Ground Left side nearICDS centre | 1 | 30.00 | 15.00 |
| 29. | கன்னியாகுமரி | நாகர்கோவில் (Corp) | Construction of 6 Anganvadi Building atNagarcoil Corporation | 1 | 45.00 | 22.50 |
| 30. | கன்னியாகுமரி | நாகர்கோவில் (Corp) | Construction of bystander shall in Government Ayurveda Medical College, Kottar | 1 | 90.00 | 45.00 |
| 31. | கன்னியாகுமரி | நாகர்கோவில் (Corp) | Construction of Boys reception unit building, Construction of Child welfare Committee building and Constructionof Govt. Home for Children | 1 | 716.50 | 358.25 |
| 32. | கன்னியாகுமரி | நாகர்கோவில் (Corp) | Construction of LibraryBuilding at Govt. HSS Kollancode | 1 | 20.00 | 10.00 |
| 33. | கன்னியாகுமரி | நாகர்கோவில் (Corp) | Construction of Anganvadi Building atManjathoppu Village At Kollancode Town Panchayat | 1 | 7.50 | 3.75 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 34. | கன்னியாகுமரி | நாகர்கோவில் (Corp) | Construction of Anganvadi Building at Vallavilai in Kollancode Town Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 35. | கன்னியாகுமரி | நாகர்கோவில் (Corp) | Construction of Anganvadi Building atPazhayamudipurai in KollancodeTownPanchayat | 1 | 7.50 | 3.75 |
| 36. | கன்னியாகுமரி | நாகர்கோவில் (Corp) | Construction of Toilet forStudents (Girls &Boys ) to Kollancode Govt. Hr. Sec. School in KollancodePanchayat | 1 | 15.00 | 7.50 |
| 37. | தூத்துக்குடி | காயல்பட்டி னம் (M) | Construction of CSC 1 in Kayalpattinam Village. | 1 | 140.00 | 70.00 |
| 38. | கரூர் | கரூர் (பள்ளப்பட்டி டவுன்) | Construction of New Building for existing Damaged old building at Health Sub centre Manmari. | 1 | 30.00 | 15.00 |
| 39. | கரூர் | கரூர் (பள்ளப்பட்டி டவுன்) | Additonal New Building in Government Hospital, Pallapatti Town Panchayat | 1 | 637.20 | 318.6 |
| 40. | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் (M) | Construction of CSC @Nagore Bus Stand | 1 | 140.00 | 70.00 |
| 41. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி (B) | Krishnajipattinam Fishdrying yard in KrishnajipattinamPanchayat | 1 | 7.46 | 3.73 |
| 42. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி(B) | Kottaipattinam Fish Drying Yard in Kottaipattinam panchayat | 1 | 7.55 | 3.78 |
| 43. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி(B) | Construction of Anganwadi Building @kottaippattinam Yohop PUPS in Kottaippattinam Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 44. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி(B) | Construction of Anganwadi Building @ Vettivayal PUPS in Vettivayal Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 45. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி(B) | New Health Sub Centre building with bore well inalaganvayal( Kattumavadi) | 1 | 46.50 | 23.25 |
| 46. | புதுக்கோட்டை | மணல்மேல் குடி(B) | New Health Sub Centre building with bore well inPR Pattinam | 1 | 46.50 | 23.25 |
| 47. | புதுக்கோட்டை | மணல்மேல் குடி(B) | New Health Sub Centre Building with bore well inMumbalai | 1 | 46.50 | 23.25 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 48. | புதுக்கோட்டை | மணல்மேல் குடி(B) | New Health Sub Centre Building with bore well in Manamelkudi | 1 | 46.50 | 23.25 |
| 49. | புதுக்கோட்டை | மணல்மேல் குடி(B) | New Health Sub Centre Building with bore well inAmmapattinam | 1 | 46.50 | 23.25 |
| 50. | புதுக்கோட்டை | மணல்மேல் குடி(B) | New Health Sub Centre Building with bore well inVitchoor | 1 | 46.50 | 23.25 |
| 51. | புதுக்கோட்டை | மணல்மேல் குடி(B) | New Health Sub Centre Building with bore well in Kottaipattinam | 1 | 46.50 | 23.25 |
| 52. | புதுக்கோட்டை | மணல்மேல் குடி(B) | New Health Sub Centre Building with bore well inJegathapattinam | 1 | 46.50 | 23.25 |
| 53. | புதுக்கோட்டை | மணல்மேல் குடி(B) | New Health Sub Centre Building with bore well in Ambavayal | 1 | 46.50 | 23.25 |
| 54. | புதுக்கோட்டை | மணல்மேல் குடி(B) | New Health Sub Centre Building with bore well in Nelveli | 1 | 46.50 | 23.25 |
| 55. | புதுக்கோட்டை | மணல்மேல் குடி(B) | New Health Sub Centre Building with Bore well in Ambalavanenthal | 1 | 46.50 | 23.25 |
| 56. | புதுக்கோட்டை | மணல்மேல் குடி(B) | Common Service Center | 1 | 140.00 | 70.00 |
| 57. | திருநெல்வலி | திருநெல் வேலி மாநகராட்சி | Construction of community Hall at jinnahThidal park Site inward No. 37 | 1 | 140.00 | 70.00 |
| 58. | தென்காசி | தென்காசி (M) | Construction of Healthcare Centre at Kizhapuliyur MaternityCentre in Ward No. 31 | 1 | 50.00 | 25.00 |
| 59. | வேலூர் | பேர்ணாம்பட் | Out Patient Block in Govt.Hospital at Pernambut | 1 | 758.58 | 379.29 |
| 60. | வேலூர் | பேர்ணாம்பட் | Improveement of Priamery health Centre,Melpatti, Pernambut | 1 | 223.75 | 111.87 |
| 61. | இராணிப்பேட்டை | மேல் விஷாரம் | Additional Building for upgradation of P.H.C as 30 Bedded Hospital atMelvisharam | 1 | 223.75 | 111.87 |
| **Total** | | | | 61 | 4268.79 | 2134.39 |

மேலும், 2021-2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 10 மாவட்டங்களில் ரூ.61,575.41 இலட்சம் மதிப்பிலான 62 திட்டங்களை செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டு, முதல் கட்ட தவணையாக ஒன்றிய (ம) மாநில அரசின் பங்களிப்பாக ரூ.307,03,70,800 ஒதுக்கீடு செய்யப்பட்டு

அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

(ரூ.இலட்சத்தில்)

| SL. No. | District | Name of the Blocks /Town | Name of the Project | No. of Units | Estimated cost | First instalment released by GoI |
|---|---|---|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Construction of class rooms in Corporation Middle School, Noyyal Palam, NP Ittery Street. | 1 | 65.50 | 32.75 |
| 2. | கோயம்புத்தூர் | குறிச்சி (M. Corp) | Providing 2 Lab in Government Higher Secondary School, Kulathupalayam. (Kuniamuthur) | 1 | 28.00 | 14.00 |
| 3. | கன்னியாகுமரி | நாகர்கோவில் | Construction of Multipurpose Hall at Vattavilai | 1 | 140.00 | 42.00 |
| 4. | கன்னியாகுமரி | நாகர்கோவில் | Construction of Skill Training Centre in Government ,ITI at Konam, Nagercoil (M)at Kanniyakumari District | 1 | 240.00 | 120.00 |
| 5. | கரூர் | கரூர் பள்ளப்பட்டி | Construction of Community Hall S.F.No: 820 / 3A, 819 /5 at Metro Garden | 1 | 140.00 | 42.00 |
| 6. | நீலகிரி | கூடலூர் | Modernised HSC Building with compound wall andwell at Athipalli | 1 | 7.00 | 3.50 |
| 7. | நீலகிரி | கூடலூர் | Modernised HSC Building with compound wall and well at Gudalur | 1 | 7.00 | 3.50 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8. | நீலகிரி | கூடலூர் | Modernised HSC Building with compound wall andwell at Cherangode | 1 | 7.00 | 3.50 |
| 9. | நீலகிரி | கூடலூர் | Modernised Health Sub Centre Building with compound wall and well at Kariyasholai | 1 | 7.00 | 3.50 |
| 10. | தென்காசி | தென்காசி | Construction of Maternity Centre and Paediatric Block at Govt. General Hospital, Tenkasi | 1 | 2200.00 | 1100.00 |
| 11. | தென்காசி | தென்காசி | Construction of Urban Health Centre at Melakadayanallur | 1 | 50.00 | 25.00 |
| 12. | தென்காசி | தென்காசி | Construction of Siddha cum yoga consulting& Training Centre at Govt. General Hospital, Tenkasi | 1 | 50.00 | 25.00 |
| 13. | தென்காசி | தென்காசி | Construction of Six Anganwadi Centres | 1 | 45.00 | 22.50 |
| 14. | தென்காசி | தென்காசி | Construction of AnganwadiCentres at Ward No.33 Mallampattai Road, Ward No.6 Vadakkuvilai Street, Ward No.9 Railway Feeder Road, Ward No.26 Mallampatti Road and Ward No.7 Jawahar Street | 1 | 37.50 | 18.75 |
| 15. | தூத்துக்குடி | தூத்துக்குடி | Construction of Super Specialty Blocks in Government Medical College Hospital at Thoothukudi in Thoothukudi District. | 1 | 13635.07 | 6817.54 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16. | தூத்துக்குடி | தூத்துக்குடி | i. Construction of Maternity and Child Health and Accident Emergency care Unit Buildings in Government Hospital at Tiruchendur, in Thoothukudi District (2408.00)<br>ii. Equipments (409.57) | 1 | 3852.76 | 1926.38 |
| 17. | தூத்துக்குடி | காயல்பட்டணம் | i)Construction of Out Patient Block and Special ward Buildings in Government Hospital at Kayalpattinam in Thoothukudi District.(1896.00)<br>ii)Equipments(300.49) | 1 | 6235.49 | 3117.75 |
| 18. | திருநெல்வேலி | திருநெல்வேலி (MC) | Construction of Hospital Block for Enhanced Care for Cardiac, Neural, Renal and Liver Disadvantaged Population in Tirunelveli Medical College at Tirunelveli | 1 | 7210.00 | 3605.00 |
| 19. | திருநெல்வேலி | திருநெல்வேலி (MC) | Construction of Maternal and Child care Unit,NCD Block and Dialysis Unit in Government Hospital at Melapalayam in Tirunelveli | 1 | 583.02 | 291.51 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 20. | வேலூர் | பேர்ணாம்பட் | Construction of Urban PHC at Pernambut in Vellore District | 1 | 108.90 | 54.45 |
| 21. | வேலூர் | வேலூர் மாநகராட்சி | Construction of Multi Super Specialty Hospital building in Government Pent land Hospital at Vellore in Vellore District | 1 | 19781.00 | 9890.50 |
| 22. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of Ayush Wing, Multipurpose Hall, Sanitation Block and Medical Equipments in Singavanam PHC | 1 | 96.00 | 48.00 |
| 23. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of Library Hall in Government Boys Hr.Sec. School in Manalmelkudi | 1 | 97.87 | 48.94 |
| 24. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of Library Hall in Government Boys Hr.Sec. School in Kottaipattinam | 1 | 97.87 | 48.94 |
| 25. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of Library Hall in Government High School in Krishnajipattinam | 1 | 97.87 | 48.94 |
| 26. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of Library Hall in Government BoysHr.Sec. School in Kattumavadi | 1 | 97.87 | 48.94 |
| 27. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of Science Lab in Government BoysHr.Sec. School in Manamelkudi | 1 | 47.23 | 23.61 |
| 28. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of Science Lab in Government Boys Hr.Sec. School in Kottaipattinam | 1 | 47.23 | 23.61 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 29. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of Science Lab in Krishnajipattinam | 1 | 47.23 | 23.61 |
| 30. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of Science Lab in Kattumavadi | 1 | 47.23 | 23.61 |
| 31. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of Science Lab in Government BoysHr.Sec. School in Ammapattinam | 1 | 47.23 | 23.61 |
| 32. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction ofCommunity Hall @ Kattumavadi inKattumavadi Panchayat | 1 | 140.00 | 42.00 |
| 33. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Kottaipattinam Meenavar Colony in Kottaipattinam Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 34. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Pathakadu in Manamelkudi Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 35. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Puthukudi in Kottaipattinam Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 36. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganvadi Building @ Aathipattinam in Ammapattinam Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 37. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Ayyampattinam in kelamanchakudi Panchayat | 1 | 7.50 | 3.75 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 38. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ LanchiyadiMariyamman K ovil in Kelamanchakudi Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 39. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Palakudi in Vettivayal Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 40. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Tajmahal (Sathamanagar) in Kottaipattinam Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 41. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Angawadi Building @ Ammapattinam Paththar Street in Ammapattinam Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 42. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Ammapattinam South in Ammapattinam Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 43. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Ammapattinam Middle Street in Ammapattinam Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 44. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Karkkamalam in Manaloor Panchayat | 1 | 7.50 | 3.75 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 45. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ AlaganVayal in Kattumavadi Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 46. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Edaiyathur in Edaiyathur Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 47. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Katumavadi Muslim Street in Katumavadi Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 48. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Vethiyankudi in Edaiyathur Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 49. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Neervelangulam in Edaiyathur Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 50. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi building @ PRPattinam in Krishanajipattinam Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 51. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Panavayal in Karakottai Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 52. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Ammapattinam North inAmmapattinam Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 53. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Karakathikottai in | 1 | 7.50 | 3.75 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | Karakathikottai Panchayat | | | |
| 54. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Challanedal in Keelamanjakudi Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 55. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Seyyanam in Seyyanam Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 56. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Jagathapattinam (Light House) in Keelamanjakudi Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 57. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of New Anganwadi Building @ Kattumavadi Muslim Street in Kattumavadi Panchayat | 1 | 7.50 | 3.75 |
| 58. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of Building for District Training Centre for Sewing Machine Operator, Domestic Data Entry Operator, Beauty Therapist, Welding and Quality Technician, Assistant Electrician in Manalmelkudi | 1 | 360.00 | 180.00 |
| 59. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construction of<br>1. Maternity and Child Health Wing Building with Furniture<br>2. Training Centre for Health Staff Sanitation Block | 1 | 469.72 | 234.86 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | Essential Medical Equipments in Ammapattin m PH | | | |
| 60. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி | Construcion of Maternity Child Health Wing Building with Furniture, Sanitation Block and Essential Medical Equipments in Kottaipattinam PHC | 1 | 469.72 | 234.86 |
| 61. | திருப்பத்தூர் | ஆம்பூர் | Construction of OP block and ICU Male Ward, Female Ward, Lab, Scan,Pharmacy and X-ray Room in Government Hospital at Ambur, Tirupattur District | 1 | 2430.60 | 1215.30 |
| 62. | திருப்பத்தூர் | வாணியம்பாடி | Construction of OP block and ICU Male Ward, Female Ward, Lab, Scan, Pharmacy and X-ray Room in Government Hospital at Vaniyambadi, Tirupattur District | 1 | 2364.00 | 1182.00 |
| **Total** | | | | 62 | 61,575.41 | 30703.71 |

2023-24 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் 13 மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட 351 கட்டுமான பணிகளுக்கான திட்ட மதிப்பீடுகள் 14.03.2024 அன்று தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற, மாநில அளவிலான ஆய்வுக் கூட்டத்தில் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டதை தொடர்ந்து, அனைத்து குழு தலைவர்/உறுப்பினர்/துறை அலுவலர்களின் கலந்தாலோசித்து 280 கட்டுமானப் பணிகளுக்கு ரூ.67.458.25 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, மத்திய அரசின் அதிகாரமளிக்கும் குழுவிற்கு (Empowerment Commitee) அனுப்பப்பட்டுள்ளது.

## 35. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் (டாம்கோ) தமிழ்நாட்டில் வசிக்கும் சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தவர்கள், பார்சிகள் மற்றும் ஜெயின் ஆகியோர்கள் பயன்பெறும் வகையில் இந்திய கம்பெனிகள் சட்டம் 1956-இன் கீழ் 31.08.1999-இல் பதிவு செய்யப்பட்டது. சிறுபான்மையினருக்கு சுய வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டுதலுக்கான செயல்பாடுகளுக்கு குறைந்தவட்டி விகிதத்தில் கடன் வழங்குவதே தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முதன்மையான குறிக்கோள் ஆகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 5.00 கோடியாகும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.2.05 கோடியாகும். டாம்கோ மூலம் தனிநபர் காலக்கடன், விராசாத் கடன் (கைவினை கலைஞர் கடன்), சிறுகடன் மற்றும் கல்விக்கடன் ஆகிய கடன் திட்டங்கள் வழங்கப்படுகிறது. இக்கழகம் செயற்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, மாநில அரசின் பொறுப்புறுதியின் மீது தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்திடமிருந்து கடனாகப் பெற்று வழங்குகிறது.

இக்கழகத்தின் கடன் உதவித்திட்டங்கள் துணை முகவர்களான மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள்/ நகர கூட்டுறவு வங்கிகள்/ தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள்/ தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி மூலம் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தனிநபர் காலக்கடன், விரசாத்கடன் (கைவினை கலைஞர் கடன்), சுய உதவி குழுக்களுக்கு வழங்கும் சிறுகடன் மற்றும் கல்விக்கடன் ஆகிய கடன்களில் பங்குத் தொகை விவரம் பின்வருமாறு:

தேசியகழகத்தின்பங்கு - 90%
டாம்கோவின்பங்கு - 5%
பயனடைவோரின்பங்கு - 5%

**35.1. தனிநபர் காலக்கடன்திட்டம்:**

பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள சிறுபான்மையின மக்கள், சுயமாகதொழில்/ வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மூலம் கீழ்கண்டவாறு நிபந்தனைக்குட்பட்டு கடனுதவி வழங்கப்பட்டுவருகிறது.

| வ.எண் | கடன்தொகை | வட்டிவிகிதம் | ஆண்டு வருமான உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | திட்டம் I ரூ.20.00 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | ஆண்டொன்றுக்கு - 6% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம் |
| 2 | திட்டம்II ரூ.30.00 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | ஆண்- ஆண்டொன்றுக்கு 8% பெண்- ஆண்டொன்றுக்கு 6% | திட்டம் I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2023-24-ஆம் ஆண்டில் 3606 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.2491.89 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**35.2. விராசாத் (கைவினைக் கலைஞர் கடன்) திட்டம்**

பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள சிறுபான்மையின கைவினை கலைஞர்களுக்கு தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மூலம் விராசாத் - (கைவினைக் கலைஞர் கடன் திட்டம்) கடன் கைவினைஞர்களுக்கு குறைந்தவட்டி விகிதத்தில் மூலப்பொருட்களான உபகரணங்கள் /கருவிகள் /இயந்திரங்கள் வாங்குவதற்கு இக்கடன் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின் விவரங்கள் பின்வருமாறு :

| வ.எண் | கடன்தொகை | வட்டிவிகிதம் (ஆண்டிற்கு) | ஆண்டு வருமான உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | திட்டம் I ரூ.10.00 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | ஆண்- 5% பெண்- 4% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம் |

| | | | |
|---|---|---|---|
| 2 | திட்டம் II ரூ.10.00 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | ஆண் - 6%<br>பெண் - 5% | திட்டம் I இன் கீழ் நன்மைகளைப் பெறமுடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் 19 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ. 17.15 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 35.3. சுய உதவிக்குழுக்களுக்கான சிறுகடன் திட்டம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மூலம் ஆண் / பெண் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு பலகாரக்கடை, காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டி, ஜவுளி வியாபாரம், ஊறுகாய் மற்றும் அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல் மற்றும் கூடை பின்னுதல், தையல் கடை, காய்கறி கடை போன்ற சிறுவியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தினை உயர்த்திட சிறுகடன் வழங்கும் திட்டம் மூலம் பின்வருமாறு கடன் வழங்கப்படுகிறது.

| வ. எண் | கடன் தொகை | வட்டிவிகிதம் (ஆண்டிற்கு) | ஆண்டு வருமான உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | திட்டம் I ரூ.1.00,000/- வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு) | 7% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம் |
| 2 | திட்டம் II ரூ.1,50,000/- வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு) | ஆண் - 10%<br>பெண் - 8% | திட்டம் I இன் கீழ் நன்மைகளைப் பெறமுடியாத நபர்கள் மற்றும் 8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2023-24ம் ஆண்டில் சுய உதவிக்குழுக்கள் மூலம் 6570 பயனாளி பயனடையும் வகையில் ரூ. 4343.26 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**35.4. கல்விக்கடன்**

அரசு/ அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் "தொழிற்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பட்டப்படிப்பு" பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு பின்வருமாறு கல்விக்கடன்கள் வழங்கப்படுகின்றன:-

| வ. எண் | கல்விக் கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டிற்கு) | பெற்றோரது ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | திட்டம் I<br>இந்தியாவில் கல்வி பயில கல்விக்கடன் ஆண்டுதோறும் ரூ.4.00 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br>மேலும், வெளிநாடுகளில் தொழிற்கல்வி பயில ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ 30.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | 3% | கிராமப்புறங்களுக்கு ரூ98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம் |
| 2 | திட்டம்–II<br>இந்தியாவில் கல்வி பயில ஆண்டுதோறும் ரூ4.00 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br>மேலும், வெளிநாடுகளில் கல்விபயில்பவர்களுக்குஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.6.00 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | மாணவர்களுக்கு - 8%<br>மாணவியர்களுக்கு - 5% | திட்டம் I இன் கீழ் நன்மைகளைப் பெறமுடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2023-24 ஆம் ஆண்டில் 6 மாணவ, மாணவியருக்கு ரூ.5.91 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2023-24ஆம் ஆண்டில் இக்கழகத்தின் மூலம் அனைத்து திட்டங்களிலும் மொத்தம் 10,201 பயனாளிகளுக்கு ரூ.6858.21 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது,

**தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன்விவரம்**

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | பயனாளிகள் | தொகை |
|---|---|---|
| 2018-19 | 7708 | 4019.97 |
| 2019-20 | 7139 | 3685.48 |
| 2020-21 | 6910 | 4185.68 |
| 2021-22 | 6034 | 3618.29 |
| 2022-23 | 8785 | 5528,06 |
| 2023-24 | 10201 | 6858.21 |

### 36. தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ)

மொழி வழி சிறுபான்மையினர் பல்வேறு திட்டங்களில் பயனடையவும் தங்கள் நலனை வளர்த்தெடுத்து சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடையவும் ஏதுவாக தமிழ்நாடு மொழி வழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் (டால்மெட்கோ) உருவாக்க அரசால் உத்தரவு பிறப்பிக்கபட்டதை தொடர்ந்து டால்மெட்கோ 2021 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு தொகை (Authorised Capital) ரூ.900 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய சட்டம், 2010, பிரிவு-2 (d) –ன் கீழ் தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக்கொண்ட, தெலுங்கு, உருது, கன்னடம், மலையாளம், சௌராஸ்டிரம் மற்றும் மராத்திய ஆகிய மொழிகளைத் தாய்மொழியாக கொண்டவர்களை மொழி வழி சிறுபான்மையினர் என தமிழ்நாடு அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

இக்கழகத்திற்கு செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாக ரூ.500 இலட்சமும், விதைத்தொகையாக ரூ.1,000 இலட்சமும். சம்பளம் மற்றும் இதர நிர்வாகச் செலவுகளுக்காக ரூ.109.20 இலட்சமும் ஆக மொத்தம்

ரூ.1,609.20 இலட்சம் நிதியினை அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## 37. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

தமிழ் நாட்டில் வாழும் மதம் மற்றும் மொழி வாரியான சிறுபான்மையினரின் நலன்களைப் பேணிக் காத்திடவும் அவர்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும் தமிழ் நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் 1989 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட, இவ்வாணையமானது தமிழ் நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டம் (Act 21 of 2010) ன்படி தமிழ் நாட்டில் சட்ட பூர்வ அதிகாரம் பெற்ற ஆணையமாக 01.08.2010 முதல் இயங்கி வருகிறது.

தமிழ் நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், அரசாணை (நிலை) எண்.39, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்: 28.06.2021 மற்றும் அரசாணை (நிலை) எண். 41, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்: 06.07.2021 இன் படி கீழ்க்கண்ட உறுப்பினர்களுடன் 3 ஆண்டு காலத்திற்கு திருத்தியமைக்கப்பட்டது.

### 37.1 ஆணைய உறுப்பினர்கள் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | திரு. சா. பீட்டர் அல்போன்ஸ். | தலைவர் |
| 2. | திரு.எம்.எம். அப்துல் குத்தூஸ். | உறுப்பினர் / துணைத்தலைவர் |
| 3. | திரு.வா .சம்பத் இ.ஆ.ப., | உறுப்பினர் செயலர் |
| 4. | திரு. ஹர்பஜன் சிங்சூரி. | உறுப்பினர் |
| 5. | திரு. மஞ்சித்சிங்நாயர். | உறுப்பினர் |
| 6. | திரு. பிரவின் குமார் டாட்டியா. | உறுப்பினர் |
| 7. | திரு.P.ப்யாரேலால் ஜெயின். | உறுப்பினர் |
| 8. | அருட்திரு. முனைவர். L .டான்போஸ்கோ. | உறுப்பினர் |
| 9. | அருட்திரு. முனைவர். M .இருதயம். | உறுப்பினர் |
| 10. | சங்கைக்குரிய. பிக்கு அமௌரியர் புத்தா. | உறுப்பினர் |
| 11. | திரு.A.B.தமீம் அன்சாரி. | உறுப்பினர் |

**37.2 ஆணையத்தின்பணிகள்**

**அ)** சிறுபான்மை இனத்தவரை பாதுகாத்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களில் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் மற்றும் நெறிமுறைகள் எவ்வாறு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது குறித்து ஆராய்ந்து மறு மதிப்பீடு செய்தல்.

**ஆ)** சட்ட திட்டங்களை செவ்வனே செயல்படுத்தி, நடைமுறையிலுள்ள சட்டங்கள் கொண்டு வரும் பொருட்டும், சம்பந்தப்பட்ட துறைகள் அல்லது அமைப்புகளுக்கு தேவையான பரிந்துரைகளை அனுப்பி வைத்தல்.

**இ)** தமிழ் நாட்டிலுள்ள சிறுபான்மையினரின் நலனுக்கென உள்ள அரசின் கொள்கை மற்றும் திட்டங்கள் ஆகியவற்றின் செயல்பாடு குறித்து ஆய்வு பணி மேற்கொள்ளுதல்.

**ஈ)** சிறுபான்மையினருக்கெதிராக வேறுபாடுகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு ஆராய்ச்சிகள், ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு தேவைப்படும் கருத்துகளை அரசுக்கு தெரிவித்தல்.

**உ)** சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நல திட்டங்கள் குறித்து உரிய கருத்துகளை தெரிவித்தல்.

**ஊ)** மாநிலத்தில் மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான வழிவகைகளை அரசுக்கு பரிந்துரைத்தல்.

**எ)** வரையறுக்கப்பட்ட கால இடைவெளியில் மாநில அரசுக்கு அறிக்கை அனுப்புதல்.

**37.3 ஆணையத்தின் செயல்பாடுகள்**

இவ்வாணையம் சிறுபான்மையின மக்கள் மற்றும் அவர்தம் கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை அழைத்து நேரடி விசாரணை செய்து அவர்களால் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகள் மீது தொடர்புடைய அரசுத் துறைகளிடமிருந்து அறிக்கைகளை

இவ்வாணையம் பெறுகிறது. சிறுபான்மையினரின் பிரச்சனைகளைக் கண்டறியும் பொருட்டு மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளைப் பார்வையிட்டு நலத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்திட அரசுக்குத் தக்க பரிந்துரைகளை தமிழ் நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் செய்து வருகிறது.

மேலும், 2023-2024-ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் மூலம் அனைத்து கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பேச்சுப் போட்டிகள் ரூ.1.00 கோடி செலவில் நடத்தப்படும் என்று புதிய அறிவிப்பு வெளியிடப்பட்டது.

எனவே, இவ்வாணையம், 2023-24 ஆம் நிதியாண்டில் 38 மாவட்டங்களில் உள்ள அனைத்து கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பேச்சிப் போட்டிகள் நடத்தி அதில் தேர்வு செய்யப்பட்ட மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 228 மாணவ மற்றும் மாணவியர்கள் மற்றும் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 6 மாணவ, மாணவியருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் பரிசளிப்பு விழா 23.08.2023 (புதன் கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் தூய தாமஸ் கலை (ம) அறிவியல் கல்லூரி அரங்கம், கோயம்பேடு, சென்னை-600 107 இல் நடைபெற்றது.

**38. தமிழ்நாடு வக்ஃப் வாரியம்**

வக்பு சட்டம், 1954 தமிழகத்தில் 15.01.1955 முதல் அமல்படுத்தப்பட்டது. இதனையடுத்து தமிழ்நாடு வக்பு வாரியம் 18.01.1958ல் அமைக்கப்பட்டது. 1995-ம் ஆண்டு வக்பு சட்டம் (மத்திய சட்டம் 43/1995)ன்படி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வாரியத்தை தமிழ்நாடு அரசு அமைத்து வருகிறது. மேலும் தற்போது வாரியம் 11 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. திரு.எம்.அப்துல் ரஹ்மான் அவர்கள் இவ்வாரியத்தின் மாண்புமிகு தலைவராக, வாரிய உறுப்பினர்களால் 22.07.2021 அன்று

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு வக்பு வாரியம் சென்னையைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு 11 மண்டல அலுவலகங்களுடன் செயல்பட்டு வருகிறது.

### 38.1 வக்பு சொத்துக்கள் நில அளவை செய்தல்

வக்பு சட்டம், 1995 பிரிவு 4 ன் கீழ் வக்பு சொத்துக்களை நில அளவை செய்வதற்காக இயக்குநர், நில அளவை துறை, அவர்களை மாநில வக்பு நில அளவை ஆணையராக அரசு நியமனம் செய்துள்ளது. மாவட்ட வருவாய் அலுவலர்கள் கூடுதல் வக்பு நில அளவை ஆணையராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வட்டாட்சியர்கள் உதவி வக்பு ஆணையர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட வாரியாக வக்பு சொத்துக்களின் விவரங்கள், 1954ம் ஆண்டு வக்பு சட்டப் பிரிவு 4-ன்படி தயாரிக்கப்பட்ட மூல அறிக்கையில் இருந்து எடுக்கப்பட்டு தமிழ் நாட்டின் அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. வாரியம் அளித்த வக்பு சொத்துக்களின் விவரங்களின்படி கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நில விபரங்கள் நில அளவை இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்டு மாவட்ட வாரியான நில விபரங்கள் வக்பு வாரிய நில ஆவண பதிவுகளுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டுள்ளன.

### 38.2. வக்பு தீர்ப்பாயம் அமைத்தல்

வக்பு சட்டம், 1995 பிரிவு 83 ன்படி, வக்பு அல்லது வக்பு சொத்துக்கள் தொடர்பான ஏதேனும் சர்ச்சைகளைத் தீர்ப்பதற்காக, தமிழ்நாடு அரசு 2018 ஆம் ஆண்டு சென்னையில் தமிழ்நாடு வக்பு தீர்ப்பாயத்தை அமைத்தது. இத்தீர்ப்பாயம், மாவட்ட நீதிபதியை தலைவராகவும், கூடுதல் மாவட்ட குற்றவியல் நடுவருக்கு இணையான மாநில குடிமை பணி அலுவலர் நிலையில் ஒரு உறுப்பினரையும், முஸ்லிம் சட்டம் மற்றும் நீதித்துறை பற்றிய அறிவைக் கொண்ட ஒருவரை மற்றொரு உறுப்பினராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வக்பு தீர்ப்பாயத்தின் வழக்குகள் விபரம்:-

| 31.03.2023 வரை நிலுவையிலிருந்த வழக்குகள் | 2023-2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | மொத்தம் | 2023-2024 ல் தீர்ப்பளிக்கப் பட்டவை | 31.03.2024 வரை நிலுவையிலுள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|
| 1690 | 854 | 2544 | 1204 | 1340 |

## 38.3. தமிழ்நாடு வக்பு வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வக்புகள்

வக்பு சட்டம் 1995 பிரிவு 65 இன் படி நிர்வாக முறைகேடு மற்றும் இதர நிர்வாகக் காரணங்களுக்காகவும் சில வக்புகள் தமிழ்நாடு வக்பு வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் எடுக்கப்பட்டு இதனை நிர்வகிக்க நிர்வாக அலுவலர்கள் வாரியத்தால் நியமிக்கப்படுகிறார்கள். தற்போது 48 வக்பு நிறுவனங்கள் தமிழ்நாடு வக்பு வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ளன. மேலும், இந்த வக்பு நிறுவனங்களிடமிருந்து வக்பு சட்டம், 1995 பிரிவு 45(7)ன் கீழ் நிர்வாகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

## 38.4. தமிழ்நாடு வக்பு வாரியத்தின் வக்பு சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் நடவடிக்கைகள்

வக்பு சட்டம், 1995 பிரிவு 54 இன் கீழ் வக்பு சொத்துக்களை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் தனி நபர்கள் வக்பு சொத்துக்களை சட்ட விரோதமாக விற்பனை மற்றும் பரிவர்த்தனை செய்வதைத் தடுத்திட தமிழ்நாடு வக்பு வாரியத்தால் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு பதிவுச் சட்டம் 1908 பிரிவு 22(A)-ன்படி ஆட்சேபணைக் கடிதங்கள் வழங்கப்பட்டு வக்பு சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

## 38.5. தமிழ்நாடு வக்பு வாரியத்திற்கு அளிக்கப்படும் நிர்வாக மானியம்

தமிழ்நாடு வக்பு வாரியத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.2.5 கோடியை மாநில அரசு நிர்வாக மானியமாக வழங்குகிறது. தமிழ்நாடு வக்பு வாரியம் 2022-2023 ஆம் ஆண்டு முதல் வக்புகளிலிருந்து வசூலித்த சகாயத்தொகையின் அடிப்படையில் 5% ஊக்கத் தொகையை கூடுதல்

மானியமாக வழங்குவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டு 2023-2024 ஆண்டிற்கு நிர்வாக மானியமாக ரூ.2,63,52,987/- வழங்கப்பட்டுள்ளது.

**38.6. முஸ்லிம் பெண்கள் (மணவிலக்கு மீதான உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் 1986 நடைமுறைப்படுத்துதல்.**

வக்பு சட்டம் 1995 பிரிவு 77(4)(g)-ன்படி முஸ்லீம் பெண்கள் (மணவிலக்கு மீதான உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 1986 ன்படி, நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மணவிலக்கு பெற்ற 5 முஸ்லிம் பெண்களுக்கு தமிழ்நாடு வக்பு வாரியத்தால் பராமரிப்பு செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**38.7. தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாடு வக்பு வாரியத்தால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்**

**(i) உலமா ஓய்வூதிய திட்டம்**

உலமா ஓய்வூதியத் திட்டம், 1981 ஆம் ஆண்டு முதல் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஏழை பேஷ் இமாம்கள், மோதினார்கள், அரபி ஆசிரியர்கள், மற்றும் தர்காக்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற முஜாவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 60 வயது நிரம்பிய மற்றும் 20 ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்கும், மாற்றுத்திறனாளியாக இருப்பின் 40 வயது நிரம்பிய மற்றும் 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களும் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

மாண்புமிகு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சரின் தலைமையில் உள்ள உலமா ஒப்பளிப்புக்குழு உலமா ஓய்வூதியம் வழங்குவதற்கான அனுமதி வழங்குகிறது. உலமா ஓய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு தற்போது உலமா ஓய்வூதியம் தலா மாதம் ரூ.3,000/- வீதம் 1,461 உலமாக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**(ii) உலமா குடும்ப ஓய்வூதிய திட்டம்**

தற்போதைய அரசு, உலமா ஓய்வூதியதாரர் இறப்பின் அவரது வாரிசுதாருக்கு உலமா ஓய்வூதியதாரர் கடைசியாக பெற்ற உலமா ஓய்வூதியத்தில் 50% தொகையினை உலமா குடும்ப ஓய்வூதியமாக அளிக்க

புதிய திட்டத்தினை உருவாக்கியுள்ளது. தற்போது வரை 19 உலமா குடும்ப ஓய்வூதியம் வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**(iii) பெரிய அளவிலான சீரமைப்பு மற்றும் பழுதுபார்ப்பு மானியம்**

மசூதிகள், தர்காக்கள் மற்றும் இதர வக்பு நிறுவனங்களில் பெரிய அளவிலான பழுதுபார்ப்பதற்கும் மற்றும் புனரமைப்பதற்கும் அரசு மானியம் வழங்குகிறது. இம்மானியம் 2023-2024 ஆண்டு ரூ.10 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இவ்வாண்டில் 134 வக்பு நிறுவனங்கள் பயனடைந்துள்ளன. மேலும், 2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.10 கோடியை மானியமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**(iv) தொகுப்பு நிதி – வக்பு நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பதற்கு**

மசூதிகள் மற்றும் தர்காக்கள் போன்ற வக்பு நிறுவனங்களில் பெரிய பழுது மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.3 கோடியில் தொகுப்பு நிதி (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் திரட்டப்படும் வங்கி ஆதாயமானது தமிழ்நாடு வக்பு வாரியத்தால் தேவைப்படும் வக்பு நிறுவனங்களுக்கு சிறிய பழுதுபார்ப்புப் பணிகளுக்காக வழங்கப்படும்.

**(v) காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குதல்**

தமிழகத்தில் பணிபுரியும் மாவட்ட காஜிகளுக்கு மாதம் ரூ.20,000/- கௌரவ ஊதியம் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டிற்கு 32 காஜிகளுக்கு அரசு ரூ.67.84 லட்சங்களை ஒதுக்கீடு செய்துள்ளது.

**39. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு**

தமிழ்நாடு மாநில ஹஜ் குழு 1958 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. ஹஜ் குழு சட்டம், 2002-ஐ (மத்திய சட்டம் எண்.35/ 2002) இயற்றிய பின்னர், ஹஜ் பயணம் சிறப்புடன் அமைய அதற்குத் தேவையான ஏற்பாடுகளை இந்திய ஹஜ் குழு மற்றும் புதுடெல்லி, சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச்சகம் ஆகியவற்றின் வழிகாட்டுதலுடன் செய்வதற்கும் மற்றும் ஹஜ் பயணிகளின் நலன் குறித்த பணிகளை மேற்கொள்வதற்கும் மூன்று

ஆண்டு காலத்திற்காக தமிழ் நாடு மாநில ஹஜ் குழு, மாநில அரசால் அமைக்கப்படுகிறது.

தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவானது, அலுவல்சார் உறுப்பினராக செயலாளர் மற்றும் செயல் அலுவலருடன் சேர்த்து 2023 ஆம் ஆண்டு 16 உறுப்பினர்களை கொண்டு தமிழக அரசால் திருத்தி அமைக்கப்பட்டது.

நிர்வாகச் செலவினத்தை மேற்கொள்ள நிர்வாக மானியம், ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புதலுக்காக மேற்கொள்ளப்படும் செலவினத்திற்கான மானியம், மாநில ஹஜ் மானியம் மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்காக மானியம் முதலான பல்வேறு நோக்கங்களுக்காக தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவிற்கு, தமிழக அரசு மானியங்களை அளிக்கிறது.

2023-2024 ஆம் ஆண்டின்போது ஒப்பளிக்கப்பட்ட மானியங்களின் விவரங்கள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| (i) நிர்வாக மானியம் | - | ரூ.50.00 இலட்சம் |
| (ii) தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவின் அலுவலகப் பயன்பாட்டிற்காக ஒரு படிப் பெருக்கி வாங்கியதற்கான மானியம். | - | ரூ. 1.54 இலட்சம் |
| (iii) ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கான மானியம் | | ரூ.20.17 இலட்சம் |

**39.1 மாநில அரசின் ஹஜ் மானியம்.**

தமிழ் நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழ் நாடு ஹஜ் பயணிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2021 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் மானியத் தொகை ரூ.6 கோடியிலிருந்து, ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஹஜ் 2023–க்காக, ஒரு நபருக்கு ரூ.25,070/– வீதம் 3987 ஹஜ் பயணிகளுக்கு அவர்களது வங்கிக் கணக்கில் பகிர்ந்தளிப்பதற்காக தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவிற்கு தமிழ் நாடு அரசின் ஹஜ் மானியத் தொகை

அரசால் வழங்கப்பட்டது. ஹஜ் 2024-க்காக 5728 ஹஜ் பயணிகளுக்கு அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக மானியத் தொகை செலுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2024-2025-ஆம் ஆண்டிற்கு ரூ.10 கோடி செய்யப்பட்டுள்ளது.

குழுவின் பிற வருமான வகைகள், மும்பை, இந்திய ஹஜ் குழுவால் வழங்குப்படும் பயணி ஒருவருக்கு ரூ.225/- வீதம் கையாளுகைத் தொகை மற்றும் ஹஜ் விமானங்களை இயக்குவதற்காக மேற்கொள்ளப்படும் உதவி ஏற்பாடுகள் முதலியவற்றிற்காக பயணி ஒருவருக்கு ரூ.300/-வீதம் 2024 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் புனிதப் பயணிகளிடமிருந்து தன்விருப்ப முறையில் வழங்கப்படும் நன்கொடைகளை தமிழ் நாடு மாநில ஹஜ் குழு பெற்றுள்ளது.

தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவின் வருடாந்திர கணக்குகள் ஒவ்வொரு வருடமும், மார்ச் 31 அன்று முடிவுறும். தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவிற்காக அரசால் அங்கீகரிக்கப்பட்ட தணிக்கையாளரால் கணக்குகள் முறையாக தணிக்கை செய்யப்பட்டு சான்று அளிக்கப்படுகிறது.

------

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.